
யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்

ஓதியுணர்ந்தொழுக

# நகுலன்

# NAGULAN

இதழ் - 02




2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




## திருமதி யாமினி சதீஸ்குமார்

**H.N.D.A., Primary Trd**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானின் ஆலய திருவருட் துணை கொண்டு நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு அருகாமையில் ஸ்ரீமான் தலைமை ஆசிரியர் கந்தையா அவர்களின் அளப்பரிய பெரும் முயற்சியினாலும், அவர்களின் மைத்துனரான கனகசபை அவர்களது சொந்தக் காணியிலே நகுலேஸ்வர வித்தியாலயம் என்ற பெயருடன் ஆரம்பித்து சிறப்பாக நடைபெற்று வந்தது. மாணவர்கள் குறைவாக இருந் தாலும் சேவை மனப்பாங்குடன் நடத்தியதால் அப்பாடசாலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் என்ற பெயருடன் இன்றும் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்விகற்றும் பல ஆசிரியர்கள் கல்வி கற்பித்தும் வரும் பாடசாலையாக அபிவிருத்தி அடைந் துள்ளது.

கல்வியிலும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடு களிலும் வெற்றி பெற்ற மாணவர்களை இன்றைய நன்நாளில் வாழ்த்தி பரிசளிக்கும் விழாவும் நகுலன் சஞ்சிகை வெளியீடும் இடம்பெறுவதனையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். இன்னும் மேன்மேலும் கல்வியிலும் சகல துறைகளிலும் இப்பாடசாலை வளர கிருபையுடன் ஆசியினை வழங்குகின்றேன்.

**ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தா
ஸ்ரீ நகுலேஸ்வர தேவஸ்தானம்
கீரிமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றி அறிவொடு ஒழுக்கமும், அன்பொடு பண்பும் தந்து மாணவச் செல்வங்களை உருவாக்கிவரும் எம் கலைக்கூட அன்னைக்கு தலை சாய்த்து, நிறுவிய வள்ளல்களை நினைவிலிருத்தி, 2013ஆம் ஆண்டுக்குரிய நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவிற்கும், நகுலன் வெளியீட்டிற்கும் ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் ராஜராஜஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களே!

இன்றைய நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக அணி செய்யும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மதிப்பார்ந்த சு. சண்முக குலகுமாரன் அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும், கிளிநொச்சி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்களே! யா/ செங்குந்தா இந்துக் கல்லூரியின் உப அதிபரும் எமது பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி. ஜெ. கலாதரன் அவர்களே!

இன்று நினைவுப் பேருரை வழங்க வருகை தந்திருக்கும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பகுதித் தலைவரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமாகிய திரு. ம. பா. மகாலிங்கசிவம் அவர்களே!

இன்று வெளிவரும் நகுலன் சஞ்சிகையை வெளியிட்டு வைப்பதற்காக வருகை தந்திருக்கும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. ச. சிவபாதரத்தினம் அவர்களே!

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்களே, முன்னாள் ஆசிரியர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, எமது பாடசாலையின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்போடு அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் உபஅதிபர், எங்கள் பாடசாலையின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்குப் பல்வேறு திறன் அபிவிருத்திக்கு அர்ப்பணிப்போடும் விடா முயற்சியுடனும் கடுமையாக உழைத்துவரும் அன்பான சகோதர ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களே! அன்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பார்ந்த பெற்றோர்களே! நலன் விரும்பிகளே! பிரியமான மாணவச் செல்வங்களே! கல்விசாரா ஊழியரே! உங்கள் அனைவருக்கும் உளம்கனிந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு அனைவரையும் வருக வருகவென இருகரம் கூப்பி வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.

தற்போது ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தின் பிரதம குருக்கள் ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்களின் தாழ் பணிந்து ஐயா பற்றி ஒருசில வார்த்தைகள் கூறலாமென நினைக்கின்றேன். பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரத்தின் பூஜைக் கடமைகளில் பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டு வருவதுடன் கடந்த மூன்று தசாப்தங்களில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளில் ஆலயத்தைக் கட்டிக் காத்ததுடன் இன்று ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு புதுமைப் பொலிவுடன் விளங்கவும் காரணமாக இருக்கின்றார். ஐயா அவர்கள் எமது பாடசாலை மீது கொண்ட அக்கறை பற்றி வார்த்தைகளால் கூறமுடியாது. கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை பாடசாலையில் இடம்பெறும் எல்லா நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதும், ஆலோசனை வழங்குவது ஐயா அவர்களதும் வழக்கமாக இருந்தது. அந்த வகையில் இன்றும் எமது அழைப்பை ஏற்று வருகைதந்து எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதுடன் ஐயா அவர்கள் தேகாரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரான திரு. சு. சண்முககுலகுமாரன் அவர்கள் இணுவிலைச் சேர்ந்தவர். இயல்பாகவே அன்புடன் கூடிய கண்டிப்பும் அர்ப்பணிப்பும், தியாக சிந்தனையும் உடையவர். தனது அலுவலகப் பதவியைப் பாராது கீழ் இறங்கிவந்து பணியாற்றுகின்ற உயர்ந்த மனப்பாங்கை உடையவர். தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்காக சிறந்த நிர்வாக நுட்பங்களைப் பயன்படுத்தி முரண்பாடு களின்றி எம்மைப் பாராட்டி உற்சாகமூட்டி பணிபுரிந்து வருகின்றார். எமது பாடசாலைக்கும் கோட்டப் பணிமனைக்கும் இடையான தொடர்பாடலைப் பேணி வருவதுடன் எமது பாடசாலைத் தேவைகளையும் தானாகவே அறிந்து நிறைவேற்றும் உயர்குணம் படைத்த பெருமகனாக இவர் விளங்குகின்றார். இவர் எல்லா வகைச் சிறப்பும் பெற்று விளங்க அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவரை வரவேற்பதில் பேருவகை அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும், கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான (வர்த்தகம்) திரு. ஸ்ரீகுமரன் அவர்கள் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் அதிபர் தரம் 2 II கிடைத்து முதலாவதாக எமது பாடசாலையில் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். எமது பாடசாலையை சொந்த இடத்தில் மீள இயங்குவதற்கு அயராது உழைத்ததுடன் எமது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அர்ப்பணிப் புடனும் தியாக சிந்தனையுடனும் செயற்பட்டு பல வெற்றிகளை பெற உறுதுணையாக நின்றார். இவரது முயற்சியினால் கடந்த வருடம் "நகுலன்" சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. இன்றும் எமது "நகுலன்" சஞ்சிகை வெளிவருவதற்கு எம்முடன் இணைந்து தன்னால் ஆன உதவிகளை எமக்கு செய்து வருகின்றார். எப்போதும் எமது பாடசாலையுடன் தொடர்பை வைத்திருக்கும் ஓர் பற்றாளர். தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் தரம் 3இல் சித்தி பெற்று வர்த்தகத் துறைக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார். சென்ற வருடம் வடமாகாணத்தில் விசேட ஆற்றலுள்ள அதிபர் ஜனாதிபதி விருதை வென்றார். இவர் மேலும் தனது சேவையில் சிறப்புக்கள் பெறவும் வாழ்க்கையில் சீரும் சிறப்பும் பெறவும் வாழ்த்தி பெருமகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

நினைவுப் பேருரையாற்றுவதற்கும் "நகுலன்" சஞ்சிகையை ஆய்வு செய்வதற்கும் வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவரும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பகுதித் தலைவருமான திரு. ம. பா. மகாலிங்கசிவம் அவர்கள் மயிலங்கூடல் ஊரைச் சேர்ந்தவர். தற்போது இளைப்பாறி... இணுவிலை புகுந்த வீடாகக் கொண்டுள்ளார். இவரின் தாயார் எமது பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவந்த முன்னாள் ஆசிரியரும், இவரின் சகோதரி எமது பாடசாலையின் பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியரும், இவரது சகோதரர்கள் எமது பாடசாலையின் பழைய மாணவர்களுமாவர். இவரது தந்தையார் அமரர் புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள் எமது பாடசாலைக் கீதத்தை எழுதியராவார். அதுமட்டுமன்றி என்னை அவருக்குத் தெரியாதபோதும் இந் நிகழ்விற்கு நினைவுப் பேருரையாற்றும்படி தொலைபேசியில் கேட்டபோது மறுப்பின்றி தெரிவித்தமை, சஞ்சிகையை ஆய்வு செய்வதற்கு அகமகிழ்வுடன் சம்மதம் தெரிவித்தமை இவரின் நற்பண்புகளை எடுத்துக் காட்டுகின்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த எமது பாடசாலையின் பழைய மாணவியும், ஆசிரியரும், முன்னாள் அதிபரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது யா/செங்குந்தா இந்துக் கல்லூரியின் உப அதிபராக கடமையாற்றும் திருமதி ஜெ. கலாதரன் அவர்கள் எமது பாடசாலையில் மாணவியாக இருந்து தொண்டராசிரியராக பணியாற்றி, நிரந்தர ஆசிரியராகி, அதிபராக கடமை யாற்றி இடமாற்றம் பெற்று சென்றமை குறிப்பிடத்தக்கது. இவரின் சகோதரர்களும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள். எமது பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இவர் இயல்பாக அர்ப்பணிப்பும் சிறந்த சேவை யாளராகவும் விளங்குகின்றார். இவர் தனது சேவையில் சிறப்புற வாழ்த்து வதோடு இவரை வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

**மாண்புடன் மிளிரும் கலைக்கூடம்**

முன்னாள் அதிபர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்கள் 515ஆவது படைப் பிரிவுடன் தொடர்புகொண்டு பாடசாலையை பார்வையிட்டார். பாடசாலையின் உண்மையான நிலைகள் திணைக்களத்துக்கு படங்கள், அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டதும் தெல்லிப்பழை பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கட்டடங்கள் அமைக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. இராணுவ அனுமதி கிடைத்தவுடன் மீளெழுச்சித் திட்டத்தின்மூலம் இப் பிரதேசம் துப்பரவு செய்யப்பட்டு நகுலேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பின் கீழ் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டன.

29-06-2011அன்று வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் 90 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட ஆய்வுகூடத்துடன் கூடிய மாடிக் கட்டடம், தண்ணீர்த்தாங்கி, ஆண்கள் மலசலகூடத் தொகுதி ஆகியன அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் முன்னாள் அதிபர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்களது தலைமையில் இடம்பெற்றது. நிதி ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஆரியரத்தன ஹேவகே, மற்றும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. இ. இளங்கோவன் ஆகியோர் அடிக்கற்களை நாட்டி வைத்தனர். சேவாலங்கா நிறுவனம் கிணற்றைத் திருத்தி அமைத்ததுடன் மைதானத்தையும் புனரமைத்துக் கொடுத்து உதவியது.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 40 அடி நீளமான வகுப்பறைத் தொகுதியை புனரமைத்துக் கொடுத்ததுடன் தற்காலிக கொட்டகைகளை சண்டிலிப்பாயில் இருந்து அகற்றி கீரிமலையில் மீள நிறுவ நிதியுதவி அளித்தது. பெண்களுக்கான மலசலகூடத்தொகுதியினை அமைப்பதற்கும் உதவியது.

02-01-2012 அன்று கீரிமலையில் பாடசாலை சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. முன்னாள் அதிபர் திரு. சு. ஸ்ரீகுமரனின் கோரிக்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைவாக வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 50 இலட்ச ரூபா பெறுமதியான கட்டடத்துக்கான அடிக்கல் 14-01-2012 அன்று கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களால் நாட்டி வைக்கப்பட்டது. கணனிக்கூடம், நூலகம், வகுப்பறை உள்ளடக்கியதாக கட்டட வேலைகள் நிறைவடைந்துள்ளன.

உலக உணவுத்திட்ட நிதியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் சமையலறையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்தி நிதிக் கொடையின் கீழ் பாடசாலைத் தோட்டவேலி அமைக்கப்பட்டதோடு, மின்சார, நீர்விநியோக வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலைக்கென ஒரு பரப்பு இரண்டு குழி அளவுடைய காணியை திரு. வ. ஞானசம்பந்தன் அவர்கள் பெரிய மனதுடன் இலவசமாக எமக்குத் தந்துள்ளார். பழைய மாணவர், பாடசாலையின் நலன் விரும்பிகள் மூலம் அப்பகுதி சீர் செய்யப்பட்டு யுனிசெவ் அனுசரணையுடன் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

எமது கோரிக்கைகளுக்கமைய பாடசாலையின் புலம்பெயர் பழைய மாணவர்கள் (கனடா), புலம்பெயர் பழைய மாணவரான திரு. உ. பரராஜ சேகரம் (பிரான்ஸ்) அவர்களின் உதவியுடன் பாடசாலையின் சுற்றுப்புற வேலி அமைக்கப்பட்டது. எனது கோரிக்கையின் பிரகாரம் எமது பாடசாலைக்கு நுழைவாயில் கதவினை புலம்பெயர் பழைய மாணவர் திரு. உ. பரராஜசேகரம் அவர்கள் அழகாக அமைத்து அன்பளித்துள்ளார்.

எமது பாடசாலையில் உள்ள கிணறு பாதுகாப்பு இல்லாது காணப்படுகின்றது. இதற்கு பாதுகாப்பாக மூடி ஒன்று தேவை எனப் பழைய மாணவர்களிடம் கோரினேன். எவ்வித மறுப்புமின்றி உடனடியாக அவர்களால் எமக்கு பாதுகாப்பு மூடி அமைத்து தரப்பட்டுள்ளது.

விளையாட்டு முற்ற பின்புற மதிலை பாடசாலை அபிவிருத்தி சங்க நிதிமூலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் பல வேலைத் திட்டங்கள் பயன்தரு விளைவு கூடியதாகவும் சிறப்பாகவும் செய்வதற்கு உறுதிபூண்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழாம்

எமது ஆசிரியர்கள் மாணவர்களது உணர்வுகளுக்கும் உளநிலைகளுக்கும் ஏற்றால் போல் எவ்வித சலிப்புமின்றி கடமையுணர்வுடன் தன்னலமற்ற சேவையை வழங்கி வருகின்றார்கள் என்றால் மிகையாகாது. குறிப்பாக ஆரம்பப் பிரிவிற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையிலும் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் மூன்று தொண்டர் ஆசிரியர்கள் சேவையாற்றுகிறார்கள். இவர்களது சேவை போற்றுதலுக் குரியது.

தற்போது எமது பாடசாலையில் 11 நிரந்தர ஆசிரியரும் 3 பகுதிநாள் ஆசிரியரும்கடமையாற்றுகின்றார்கள்.

### புதிய நியமனம் பெற்றோர்

01. திருமதி யா. சத்தியசீலன்
02. திருமதி சு. கௌரிகாந்தன்
03. திரு. சி. கௌரிதரன்
04. திரு. வ. முருகதாஸ் (பகுதிநாள்)

### இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

01. திருமதி ந. சரவணபவன்
02. திருமதி சி. சிவகுமார்
03. திருமதி ம. இதயராசா
04. திரு. ஆ. சங்கரன்
05. திருமதி. சு. விஜையயாழினி
06. திருமதி து. ஸ்ரீரங்கநாதன்
07. திருமதி யா. கருணாகரன்

### பதவி உயர்வு பெற்றுச் சென்றோர்

01. திரு. சு. ஸ்ரீகுமரன்

### ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றோர்

01. திருமதி நி. ஜெயக்குமார்
02. திருமதி வா. தவச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதானம்

## மெய்வல்லுநர் போட்டி

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நடாத்தப்பட்டு பாடசாலை மட்டம், கோட்டமட்டங்களில் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் பெற்றார்கள். 2011இல் இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக இடம்பெற்றது. 2012, 2013இல் மைதானப் பிரச்சினை காரணமாக இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற வில்லை. ஆனாலும் கோட்டமட்ட போட்டிகளில் பங்குபற்றினோம். போதியளவு பயிற்சி, வாய்ப்புக்கள் இன்மையால் மாணவர்கள் இடங்களைப் பெறவில்லை.

## தமிழ்த்தினம்

2011இல் கோட்டமட்டப் போட்டிகளில் குழு இசைப்பிரிவில் எமது மாணவிகள் இரண்டாம் இடத்தையும் 2012இல் கோட்டமட்ட போட்டிகளில் கட்டுரைப் பிரிவில் செல்வி சி. நிதர்சனா இரண்டாம் இடத்தையும், சிறுகதைப் பிரிவில் செல்வி சி. ஜென்சிகா 2ஆம் இடத்தையும் பெற்றனர்.

## ஏனைய போட்டிகள்

2011இல் யுனிசெவ் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கோட்டமட்டம் செல்வன் கு. கனிஸ்வரன் மூன்றாம் இடத்தையும், செல்வன் கு. டேவிற் லிவிங்சன் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். பன்மைத்துவ கலாச்சார போட்டி கோட்ட மட்டத்தில் சிறுகதைப்பிரிவில் செல்வி கை. ஜிலாஞ்சலி இரண்டாம் இடத்தையும், கவிதைப் பிரிவில் செல்வன் சி. நிருஷாந் மூன்றாம் இடத்தையும் சித்திரப் போட்டியில் செல்வன். கை. நிசாந்தன் முதலாம் இடத்தையும் பெற்றனர்.

கண்ணிவெடி அபாயக் கல்வி என்ற தொனிப் பொருளிலான கட்டுரைப் பிரிவில் செல்வி சி. நிதர்சனா மூன்றாம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் பெற்றனர்.

விஞ்ஞான விநாடிவினா போட்டியில் செல்வன் பு. நிக்சன் கோட்ட மட்டத்தில் 5ஆம் இடத்தை பெற்றார். மனைப்பொருளியல் போட்டியில் செல்வி சி. நிதர்சனா முதலாம் இடத்தையும் செல்வி கை. ஜிலாஞ்சலி இரண்டாம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் பெற்றனர்.

விசேட கல்விப் பிரிவினால் நடாத்தப்பட்ட வலய மட்ட தனிநடனப் பிரிவில் செல்வி சி. நிருஷா இரண்டாம் இடத்தையும் செல்வன். க. கபில்ராஜ் தனிப்பாடல் பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012இல் தெல்லிப்பழை பிரதேச செயலகம் நடாத்தும் சிறுவர்தினப் போட்டிகளில் பேச்சுப் பிரிவில் செல்வி ஜெ. டிபினியா முதலாம் இடத்தையும், செல்வன் ச. கபில்தாஸ் மூன்றாம் இடத்தையும், செல்வி ச. நிருஷா முதலாம் இடத்தையும், கட்டுரைப் பிரிவில் செல்வி சு. கனிதா இரண்டாம் இடத்தையும் சிறுகதைப் பிரிவில் செல்வி கு. ஜென்சிகா முதலாம் இடத்தையும் பெற்றனர்.

சர்வதேச எழுத்தறிவுதின வலயமட்ட போட்டியில் பேச்சுப் பிரிவில் செல்வன் ச. கபில்தாஸ் முதலாம் இடத்தையும், உறுப்பெழுத்துப் பிரிவில் செல்வி சி. யாழினி இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

நவராத்திரி தினத்தை முன்னிட்டு சகலகலாவல்லி மாலை ஓதற் போட்டியில் செல்வி சி. நிருஷா கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றார்.

### மாணவர் வளம்

எமது பாடசாலையின் தற்போதைய மாணவர்கள் 199பேர். ஆண்கள் 96, பெண்கள் 103. இவ்வாண்டில் மாணவ வளம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

### ஆரம்ப பிரிவுப் போட்டிகள்

2011ஆம் ஆண்டில் குடும்ப மட்ட சித்திரப்போட்டியில் செல்வி அ. டிலக்சனா 2ஆம் இடத்தையும், செல்வி. தி. அபின்சிகா 2ஆம் இடத்தையும், செல்வி. பா. தாரணி 3ஆம் இடத்தையும், செல்வன் ரூ. தர்சன் 3ஆம் இடத்தையும், செல்வன் சூ. சிந்துஜன் 2ஆம் இடத்தையும் பெற்றனர்.

குடும்ப மட்ட ஆங்கில குழுப்பாடல் போட்டியில் தரம் 4 மாணவர்கள் 3ஆம் இடத்தையும், குடும்ப மட்ட சிறுவர் நாடகப் போட்டியில் தரம் 3, 4, 5 மாணவச் செல்வங்கள் 2ஆம் இடத்தையும் பெற்றனர்.

2012ஆம் ஆண்டில் குடும்பமட்ட சித்திரப் போட்டியில் செல்வி ஜெ. யஸ்வினி 3ஆம் இடத்தையும், செல்வி கி. தஸ்மி 2ஆம் இடத்தையும், செல்வி தி. அவின்சிகா 3ஆம் இடத்தையும், செல்வன் ஜெ. டிலான்சன் 3ஆம் இடத்தையும் பெற்றனர்.

குடும்பமட்ட திருக்குறள் மனனப் போட்டியில் செல்வி வி. டிலாணி 2ஆம் இடத்தையும், செல்வன் ஜெ. டிலான்சன் 3ஆம் இடத்தையும் பெற்றனர். குடும்ப மட்ட வாய்ப்பாடு மனனப் போட்டியில் செல்வன் ச. துலக்சன் 3ஆம் இடத்தைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விச் செயற்பாடுகள்**

பல்வேறு வசதியீனங்களுடன் இயங்கிவரும்போதிலும் கல்வி நிலையில் 2010ஆம் ஆண்டைக் காட்டிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 100ற்கு மேல் ஒரு மாணவனும், ஏனைய 6 மாணவர்களும் 70ற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையிலும் பாடரீதியிலான சதவீதங்கள் உயர்வடைந்துள்ளன. ஒரு மாணவி க.பொ.த. உயர்தரத்தில் இணைந் துள்ளார். 2012ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 100ற்கு மேல் 3 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். ஏனைய அனைவரும் 70ற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

சாதாரணதரப் பரீட்சையில் பாடரீதியான சித்திவீதங்கள் உயர்வடைந் துள்ளன. க.பொ.த உயர்தரத்தில் இரண்டு மாணவர்கள் இணைந்துள்ளனர்.

**மன்றங்கள்**

மாணவர்களது படைப்பாற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுப்ப தோடு அவர்களின் ஆளுமையை விருத்தியை செய்யும் நோக்குடன் பல்வேறு மன்றங்கள் செயற்படுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் நேர அட்டவணைப் பிரகாரம் மன்றக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. தமிழ் மன்றம், இந்து மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், கணித விஞ்ஞான மன்றம், ஆரம்பக்கல்வி மன்றம், சுகாதாரக் கழகம் என்பன செயற்படுகின்றன.

அத்துடன் நவராத்திரி காலங்களில் விழாவினை சிறப்புற நடாத்தி செயல்முறைப் போட்டிகளை வைத்து சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கி வருவதுடன் வருடாந்த கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று வழிபாட்டிலும் கூட்டுப்பிரார்த்தனையிலும் பங்குகொள்ள வைப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

காலைப் பிரார்த்தனையின் போது நேர அட்டவணைப் பிரகாரம் ஆசிரியர்களதும் மாணவர்களதும் நற்சிந்தனைகளும் இடம்பெறுகின்றன.

**ஒழுக்காற்றுக்குழு**

அதிபரது தலைமையில் ஒழுக்காற்றுக்குழு செயற்படுகிறது. ஒழுக்காற்றுக்குழுவால் மாணவ முதல்வர்கள் வழிநடத்தப்படுகின்றனர். அதன்படி பாடசாலைக்குரிய ஒழுக்க விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிய உணவு

உலக உணவுத் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மதிய உணவு மாணவர்களின் தரமான கல்விக்கு தரமான செயற்பாடாக சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்செயற்பாட்டிற்காக இவ்வருடம் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்புடனும் கட்டப்பட்டது. இதற்காகதிருமதி பா. சரஸ்வதி, திருமதி பா. மரியம் ஆகிய இரு சமையலாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இதற்கு திரு. செ. கமலக்கண்ணன் மற்றும் பொறுப்பாசிரியர்களும் ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர். எமது பாடசாலை அதிபர். ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இத்திட்டத்திற்கு பெரிதும் கைகொடுத்து உதவுகின்றனர்.

## ஆசிரியர் கழகம்

ஒற்றுமை, உணர்வுடன் ஆசிரியர் நலன் பேணி அங்கத்தவர் சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் மங்கல, அமங்கல நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்பளிப்புக்களையும், பத்திரிகை வாயிலாக பாராட்டுக்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்திச் சங்கமும் அபிவிருத்திச் சபையும்

எமது பாடசாலையின் இருதூண்களாக அபிவிருத்திச் சங்கமும், அபிவிருத்திச் சபையும் துணை நிற்பதுடன் பாடசாலையின் எல்லா வீசேட நிகழ்வுகளின்போது சகலவிதமான உதவிகளையும் நல்கி உறுதுணையாக செயற்பட்டு வருகின்றனர்.

## பழைய மாணவர் சங்கம்

எமது பாடசாலையின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உன்னதமான பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர். புலம்பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் அதி உன்னதமான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர். மேலும் அதிபருக்கும் நிர்வாகத்திற்கும் சிறந்த ஒத்துழைப்புக்கள் வழங்குகின்றனர்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

2013யூலை 14ஆம் திகதி இன்று நடைபெறுகின்ற நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவிற்கும் நகுலன் வெளியீட்டிற்கும் ஆசியுரை வழங்கி எங்களையும் விழாவினையும் வாழ்த்திப் பாராட்டிய ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்வேறு வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் தெல்லிப்பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. சண்முககுலகுமாரன் அவர்களுக்கு எங்கள் நன்றிகளை அகமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்து சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் யா/செங்குந்தா இந்துக்கல்லூரி உபஅதிபர் திருமதி ஜெ. கலாதரன் அவர்களுக்கு எங்கள் நன்றிப் பூக்களைச் சொரிகின்றோம்.

நினைவுப் பேருரை ஆற்றுவதற்கும் சஞ்சிகையை ஆய்வு செய்வதற்காகவும் வருகைதந்திருக்கும் பகுதித் தலைவர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி திரு. ம. பா. மகாலிங்கசிவம் அவர்களுக்கு உளம் நெகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

"நகுலன்" சஞ்சிகையை வெளியிட்டு வைப்பதற்கு வருகைதந்த முன்னாள் அதிபர் திரு. சு. சிவபாதரத்தினம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவிற்கு ஞாபகார்த்தப் பரிசுகள், விசேட பரிசுகள், பொதுவான பரிசுகள், சான்றிதழ்கள் தந்து விழாவை மேலும் சிறப்பாக உயர்த்த துணைபுரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் நன்றிப் பூக்களை சொரிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வெளிவரும் நகுலன் சஞ்சிகைக்கான நிதியுதவி வழங்கிய புலம்பெயர் பழைய மாணவன் திரு. உ. பரராஜசேகரம் அவர்களுக்கும் இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களை தந்து உதவிய எமது பாடசாலையின் புலம்பெயர் முன்னாள் அதிபர், எமது பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், உரிய வேளையில் தந்து உதவிய விக்னேஸ் பிறண்டேர்ஸ் அனைவருக்கும் உளம்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம.

இவ்விழாவிற்கு வருகை தந்துள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திச் சபை, பழைய மாணவர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வேறு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உன்னத இலட்சியத்துடன் தோள் கொடுக்கும் உபஅதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளை கூறுகின்றோம். அடுத்து பாடசாலை நலனில் அக்கறை கொண்டு பல வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கு நன்றிகளைக் கூறி அதிபர் உரையை நிறைவு செய்கின்றேன்.

**அதிபர்**
யா/ கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 சிறப்புப் பரிசு பெறுவோர் விபரம்

| இல | மாணவர் பெயர் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | கு. கனிஸ்ரன் - 06 | யுனிசெப் அனுசரணையுடன் சித்திரப் போட்டி | | 3ம் இடம் | |
| 02. | கு. டேவிற் லிவிங்சன் - 06 | யுனிசெப் அனுசரணையுடன் சித்திரப் போட்டி | | 2ம் இடம் | |
| | | திரு. திருமதி உமாபதிசிவன் நினைவாக வழங்குபவர் திரு. உ. பரராசசேகரம் | | | |
| 03. | அ. டிலக்சனா - 01 | சித்திரப்போட்டி | 2ம் இடம் | | |
| 04. | தி. அபின்சிகா - 02 | சித்திரப்போட்டி | 2ம் இடம் | | |
| 05. | பா. தாரணி - 03 | சித்திரப்போட்டி | 3ம் இடம் | | |
| 06. | ரூ. தர்சன் -04 | சித்திரப்போட்டி | 3ம் இடம் | | |
| 07. | சூ. சிந்துஜன் - 05 | சித்திரப்போட்டி | 2ம் இடம் | திரு. திருமதி தண்டிகை நினைவாக வழங்குபவர் தண்டிகை குடும்பம் | |
| 08. | ரூ. தர்சன் - 04 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | 2000/- | |
| 09. | தே. வாசுகி - 04 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | | |
| 10. | ஞா. தனுசன் - 04 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | | |
| 11. | தி. தர்சிகா - 04 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | | |
| 12. | சி. நிலாகினி - 02 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | | |
| 13. | கி. தமிழ்ச்செல்வி - 04 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | | |
| 14. | ம. லக்சனா -04 | குழு ஆங்கிலப் பாடல் | 3ம் இடம் | | |
| 15. | ம. லக்சனா - 04 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 16. | தி. தர்சிகா - 04 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | திருமதி அருள்மொழிராணி தர்மரட்ணம் நினைவாக வழங்குபவர் திரு. தர்மரட்ணம் குடும்பம் 2000/- | |
| 17. | கி. தமிழ்ச்செல்வி - 04 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 18. | ஞா. தனுசன் - 04 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 19. | ரூ. தர்சன் - 04 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|
| 20. | தே. வஸ்ணவி - 03 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 21. | பா. தாரணி - 03 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 22. | சூ. சிந்துஜன் - 05 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 23. | ம. சியேந்திரன் - 03 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 24. | ம. தரிஷா - 05 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 25. | பு. நிக்ஷனா - 05 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 26. | சு. வினிதா - 05 | சிறுவர் நாடகம் | 2ம் இடம் | | |
| 27. | சி. நிருஷா - 09 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | | |
| 28. | சி. ஜென்சிகா - 09 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | | |
| 29. | சு. கனிதா -09 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | | |
| 30. | பு. நிக்சன் -06 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | 2ம் இடம் | |
| 31. | ஞா. சுஜீபா - 07 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | செல்வி சிவாஜினி சிவகுமார் நினைவாக | |
| 32. | அ. ஜான்சிகா - 08 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | வழங்குபவர் திரு. திருமதி சிவகுமார் | |
| 33. | க. சிந்துஜா -08 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | 2000/- | |
| 34. | க. கேன்சிகா -07 | குழு இசை - தமிழ்த்தினப்போட்டி | | | |
| 35. | கை. ஜிலாஞ்சலி - 10 | பன்மைத்துவ கலாச்சாரப் போட்டி சிறுகதை | 2ம் இடம் | திருமதி குஞ்சரம் இராமலிங்கம் | |
| 36. | சி. நிருஷாந் - 10 | பன்மைத்துவ கலாச்சாரப் போட்டி கவிதை | 3ம் இடம் | நினைவாக வழங்குவர் | |
| 37. | கை. நிசாந்தன் - 11 | பன்மைத்துவ கலாச்சார சித்திரப்போட்டி | 1ம் இடம் | திரு. இ. திருச்செல்வம் 2000/- | |
| 38. | பு. நிக்சன் - 6 | விஞ்ஞான விநாடி வினா | 5ம் இடம் | | |
| 39. | சி. நிருஷா - 9 | விசேட கல்வி தனி நடனம் | | | 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|
| 40. | க. கபில்ராஜ் - 7 | விசேட கல்வி தனிப்பாடல் | | | 3ம் இடம் |
| 41. | சி. நிதர்சனா - 10 | கண்ணிவெடி அபாயக் கல்வி கட்டுரை | | 3ம் இடம் | |
| 42. | சி. நிதர்சனா - 10 | மனைப்பொருளியல் போட்டி | | 1ம் இடம் | |
| 43. | கை. ஜிலாஞ்சலி - 10 | மனைப்பொருளியல் போட்டி | | 2ம் இடம் | |
| 44. | சூ. சிந்துஜன் - 05 | தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவன் (119 புள்ளி) | திரு. திருமதி. விநாயகர் இலட்சுமிப்பிள்ளை நினைவாக வழங்குபவர் திருமதி இ. பற்குணராஜா - 1000/- | | |
| 45. | யோ. றெமஸ்ரா - 11 | ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி | செல்வி நகுலநாயகி தம்பாப்பிள்ளை நினைவாக வழங்குபவர் செல்வி ஜெயலட்சுமி தம்பாப்பிள்ளை. 2000/- | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 சிறப்புப் பரிசு பெறுவோர் விபரம்

| இல | மாணவர் பெயர் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|
| 01. | கெ. யஸ்மினி - 01 | சித்திரப்போட்டி | 3ம் இடம் | திருமதி பரமேஸ்வரி பார்வதிநாதசிவம் | |
| 02. | கி. தஸ்மி - 02 | சித்திரப்போட்டி | 2ம் இடம் | நினைவாக வழங்குவர் | |
| 03. | தி. அவின்சிகா - 03 | சித்திரப்போட்டி | 3ம் இடம் | ம. பா. மகாலிங்கசிவம் | |
| 04. | ஜெ. டிலான்சன் - 04 | சித்திரப்போட்டி | 3ம் இடம் | 1000/- | |
| 05. | சி. நிருஷாந் - 11 | சமூக விஞ்ஞானப் போட்டி | | 2ம் இடம் | |
| 06. | வி. டிலானி - 01 | திருக்குறள் மனனம் | 2ம் இடம் | திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை | |
| 07. | ஜெ. டிலான்சன் - 04 | திருக்குறள் மனனம் | 3ம் இடம் | நினைவாக வழங்குபவர் | |
| | | | | திருமதி ச. சோமசுந்தரம் | |
| | | | | 2000/- | |
| 08. | ச. துலக்ஷன் - 05 | வாய்ப்பாடு மனனம் | 3ம் இடம் | | |
| 09. | சி. நிதர்சனா - 11 | தமிழ்த்தினப்போட்டி - கட்டுரை | | 2ம் இடம் | |
| 10. | சி. ஜென்சிகா - 10 | தமிழ்த்தினப்போட்டி - சிறுகதை | | 2ம் இடம் | |
| 11. | ஜெ. டிபினியா - 08 | தெல்லிப்பழை பிரதேச செயலகம் பேச்சு | | | 1ம் இடம் |
| 12. | ச. கபில்தாஸ் - 07 | தெல்லிப்பழை பிரதேச செயலகம் பேச்சு | திருமதி சின்னம்மா மகாலிங்கம் | | 3ம் இடம் |
| 13. | க. சிந்துஜா - 09 | தெல்லிப்பழை பிரதேச செயலகம் பேச்சு | நினைவாக வழங்குபவர் | | 2ம் இடம் |
| 14. | சு. கனிதா -10 | தெல்லிப்பழை பிரதேச செயலகம் கட்டுரை | மகாலிங்கம் குடும்பம் | | 2ம் இடம் |
| 15. | சி. நிருஷா - 10 | தெல்லிப்பழை பிரதேச செயலகம் பேச்சு | 2000/- | | 2ம் இடம் |
| 16. | சி. ஜென்சிகா - 10 | தெல்லிப்பழை பிரதேச செயலகம் சிறுகதை | | | 1ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | போட்டி விபரம் | | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 17. | ஜெ. டிலக்சிகா - 05 | தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் | 144 புள்ளி | திரு. திருமதி சிவப்பிரகாசதம் நினைவாக வழங்குபவர் திரு. சிவகுமார் 10000/- | | |
| 18. | ச. துலக்சன் - 05 | | 138 புள்ளி | திரு. திருமதி பொன்னுத்துரை நினைவாக வழங்குபவர் திரு. இராதாகிருஷ்ணன் 10000/- | | |
| 19. | ர. தமிழ்மதி | | 118 புள்ளி | திரு. கதிரமலை நினைவாக வழங்குபவர் திருமதி ஜெ. கலாதரன் 5000/- | | |
| 20. | சி. நிருஷாந் | ஜீ.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் | | திரு. திருமதி உமாபதிசிவன் நினைவாக உ. ரவீந்திரன் 10000/- | | |
| 21. | சி. நிதர்சனா | | | திரு. திருமதி கந்தையா நினைவாக வழங்குபவர் திரு. க. தயாபரநாதன் 10000/- | | |
| 22. | சி. சிவரூபன் | கற்றல் ஊக்குவிப்பு | | திரு. திருமதி கந்தையா நினைவாக வழங்குபவர் திரு. க. தயாபரநாதன் | | |
| 23. | சி. நிருஷா - 10 | சகலகலாவல்வி மாலை ஓதற் போட்டி<br>திரு. திருமதி உமாபதிசிவன் நினைவாக வழங்குபவர் திரு. உ. ரவீந்திரன் | | | 1ம் இடம் | |
| 24. | ச. கபில்தாஸ் - 07 | சர்வதேச எழுத்தறவு தினப் போட்டி | | | | 1ம் இடம் |
| 25. | சி. யாழினி - 07 | சர்வதேச எழுத்தறிவுதின உறுப்பெழுத்து | | | | 2ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிற்பவர்கள் : இடமிருந்து வலம்
திருமதி மே.டி.சை. சஞ்சீவன், திருமதி ச. இலட்சியன், திருமதி சு. கௌரிகாந்தன், திருமதி றோ. ராங்கநாதன், செல்வி க. புஸ்பரேகா,திரு. வ. முருகதாஸ், திரு. செ. கமலக்கண்ணன், திரு. க. கஜேந்திரன், செல்வி நா. தர்சினி, செல்வி அ. ஜெஜீபா, திருமதி யா. சத்தியசீலன், செல்வி கௌ. சொர்ணலிங்கம்.

இருப்பவர்கள் : இடமிருந்து வலம்
திரு. சி. கௌரிதரன், திருமதி. இ. பற்குணராஜா (உபஅதிபர்), திருமதி யா. சதீஸ்குமார் (அதிபர்), திருமதி வ. விமலச்சந்திரன், செல்வி ஸ்ரீ. ஆறுமுகராஜா, திரு.த. குகநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வராவும் நானும்

நினைவலைகள்

அமரர் கந்தையா அவர்கள் தான் வேறு பாடசாலை வேறு என்று நினைத்திலர். தான் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு செயல்வீரன். எந்தத் தடை வந்தாலும் எதிர்த்து நின்று போராடும் வல்லமை படைத்தவர். பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தில் ஒரு அறிவாலயம் இல்லையே என்ற பல பெரியார்களின் குறை தீர்க்க எண்ணி இப்பாடசாலையை ஆரம்பித்து தனது ஆசிரியர் பதவியையும் உதறித் தள்ளிவிட்டு பொறுப்பேற்றார் என்றால் அவரின் பெருமை, திறமை, சாதனை இவற்றைச் சொல்லவும் வேண்டுமா?

1955இல் நான் ஆசிரியர் பயிற்சி முடித்ததும் எனக்கு வெளி மாவட்டத்தில் நியமனம் கிடைத்து தாயார் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டு நோய்வாய்ப்பட்டிருந்தபடியால் போகமுடியாத நிலை. அமரர் கந்தையா அவர்கள் எங்களுக்குத் தெரிந்த இராசா அண்ணருடன் வந்து தாங்கள் கீரிமலையில் ஒரு பாடசாலை ஆரம்பிப்பதாகவும் அங்கு வந்து கடமை யாற்றும்படியும் கேட்டார். நான் பதிவுசெய்யப்படாத பாடசாலையில் படிப்பிக்கவில்லையென மறுக்க, பாடசாலையைப் பதிவு செய்யாது விட்டால் வேறு பாடசாலை என்றாலும் நியமனம் எடுத்துத்தருவதாக உறுதி அளித்ததன் காரணமாக உடன்பட்டு கடமையாற்றச் சென்றேன். அங்கு எனக்கு அறிமுகமான சரணவமுத்து ஆசிரியர் அவர்கள் இருந்தமை ஆறுதல் அளித்தது.

பாடசாலை ஒரு சிறிய கொட்டில். ஓலையால் வேயப்பட்டது. நிலம் சீமென்ற். மாணவர்களுக்கு வாங்கு மேசை, ஆசிரியர் கதிரை 3, அதிபரின் கதிரைக்கு முன்னால் ஒரு பெரிய மேசை, மேலே திறந்து மூடக்கூடியது. அதற்குள்தான் பாடசாலை ஆவணங்கள் வைப்பது. ஆசிரியர், மாணவர் இடாப்பு, நேரசூசி, வெண்கட்டி, சின்னமணி, மணிக்கூடு என்பன. ஒருநாள் இரவு நல்ல மழை. கூரையிலிருந்து தண்ணீர் ஒழுகி மேசைப் பலகையின் வெடிப்பூடாக தண்ணீர் போய் எல்லாம் நனைந்துவிட்டன. பாடசாலையைப் பதிவு செய்வதற்கு இது ஒரு அபசகுனமோ என அதிபர் பதறிப்போனார். எந்த வசதியும் அற்ற இடத்தில் பாடசாலை அமைந்ததால் குடிநீர் வசதி இல்லை. பக்கத்து வளவுக் கிணற்றில்தான் தண்ணீர் எடுப்பது. அதிபரும், சரவணமுத்து ஆசிரியரும்தான் தண்ணீர் அள்ளிக்கொண்டு வருவர். மாணவர்கள் ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்டவர்கள். முதலாம் வகுப்பில் தான் மாணவர் தொகை கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் ஒருமித்து 40 மாணவர்கள். பின்பு மாணவர் தொகை சிறிது சிறிதாகக் கூடியது. கட்டட வசதி போதவில்லை. இப்பாடசாலை ஆரம்பிக்க காணி கொடுத்து உதவிய விதானையார் திரு. கனகசபை, அதிபர் மற்றும் பெரியார்கள் கிராமம் தோறும் சென்று சேர்த்த பணத்துடன் அத்திவாரமிடப்பட்டது. பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் S. J. V. செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்களின் உதவியுடன் கட்டடம் முடிவுபெற்று, அவரையே அழைத்து திறப்புவிழாவும் நடத்தப்பட்டது. கட்டடம் சகல அம்சங்களும் பொருந்தியதாக பின்னுக்கு மூன்று அறைகள், மண்டபத்தில் ஒரு மேடை, முன்னுக்கு இரு அறைகள், (ஒன்று அதிபர் காரியாலயம் மற்றயது ஆசிரியர் அறையாக) அமையப்பெற்றிருந்தது. பாடசாலையும் பதிவு செய்யப் பட்டமையால் 1957ஆம் ஆண்டு முற்பகுதியிலிருந்து நாங்கள் சம்பளம் பெறக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது. வேலை வாய்ப்புத் தேடி வந்த ஆசிரியர்களுக்கு அதிபர் மாணவர்களைச் சேர்த்து வந்தால் நியமனம் தரலாம் என நிபந்தனை விதித்தார். அதன் காரணமாக பரமேஸ்வரி ஆசிரியை, கனகசபை ஆசிரியர் வந்து சேர்ந்தனர். அதைத் தொடர்ந்து சரஸ்வதி ஆசிரியையும் வந்து சேர்ந்தார். யானும் ஆசிரியைகள் பரமேஸ்வரி, சரஸ்வதி அவர்களும் காலை 8.00 மணிக்கு பாடசாலைக்கு வந்தால் பின்னேரம் வகுப்பு எடுத்துவிட்டு மாலை 6.00 மணிக்கு வீடு சேருவோம். மாணவர் தொகையும் கூட ஆசிரியர் தொகையும் கூடிக்கொண்டே போனது. வகுப்புக்கள் வருடாவருடம் ஒவ்வொரு வகுப்பாக கூடி க.பொ.த. (சாதாரண)வரை வளர்ந்தது. 3, 5, 7 வகுப்புக்களுக்கு வலி வடக்கு ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னிலை வகித்தது எங்கள் பாடசாலை. க.பொ.த பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் விசேட சித்தியுடன் சித்தியெய்தினர். வலிவடக்குப் பாடசாலைகளுக்கிடையே மேற்படி சங்கத்தால் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டிகளில் எங்கள் வித்தியாலயம் முதலிடம் பெற்றது. வடமாகாணத்தால் நடாத்தப்படும் போட்டிகளிலும் பங்குபற்றக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன. அதுமாத்திரமன்றி கொழும்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி தங்கப்பதக்கங்கள் தட்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக அடுத்தடுத்த கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் சேரத் தொடங்கினர். திறமைபெற்ற ஆசிரியர்களையும் அதிபர் தேர்ந்தெடுத்தார். அதன் காரணமாக சைவப் புலவர் திரு. செல்லத்துரை, பண்டிதர் திரு. அப்புத்துரை ஆசிரியர்கள். அவர்கள் அதிபர் பதவி பெற்றுச் செல்லும்வரை இங்கு கல்வி கற்பிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. வெளிமாவட்டத்திலிருந்து ஆசிரியர் இடமாற்றம் நிகழ்ந்தபோது எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையையே விரும்பிவந்தனர். குறுகிய காலத்தில் நமது வித்தியாலயம் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது என்றால் அது அதிபரின் அயராத உழைப்பேயாகும். நமது வித்தியாலயம் சகல வளங்களான மாணவர் தொகை, ஆசிரியர் வளம், கட்டட வசதிகள், விளையாட்டிடம், நீர் வசதி, மின்சாரம் என்பன கொண்ட மகாவித்தியாலய மாகத் திகழ்ந்தது.

அதிபர் அவர்கள் தலைமைத்துவத்தில் மாத்திரமன்றி ஆசிரியர்களை உற்சாகப்படுத்தி வேலை வாங்குவதிலும் நினைத்ததை உடனே முடிப்பதிலும் தீரர். பாடசாலைக்கு ஒரு சின்னம் அமைக்க வேண்டுமெனக் கூறி அதற்குரிய எண்ணக்கருக்களைத் தந்து என்னை உருவமைக்கும்படி கூறினார். இதை அனுபவம் மிக்கவர்கள் செய்ய வேண்டுமெனக்கூற இல்லை நான் சொல்கிறேன் நீங்களே உருவமையுங்கள் என்றார். அதன்படி நானும் கஸ்டப்பட்டு செய்து முடித்தேன். பாடசாலைச் சின்னத்தைப் பார்க்கும்போது என் கைவண்ணமே எனப் பெருமைப்படுவதுடன் அதற்கு உந்து சக்தியாக இருந்தவர் அதிபர் என்பதையும் கூறாமல் இருக்க முடியாது. வருடா வருடம் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா நடாத்தியதுடன் பத்தாண்டு விழாவையும் சிறப்பாக நடாத்தி முடித்தார்.

பின் பாடசாலை பல இடர்களைச் சந்தித்தபின் வெள்ளிவிழா கொண்டாட வேண்டிய காலமும் அதிபர் ஓய்வுபெறும் காலமும் நெருங்கியது. வெள்ளிவிழாவை அதி விமரிசையாக கொண்டாடியதுடன் வெள்ளிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

அதிபர் ஓய்வுபெற அதிபர் தரமுடைய ஒருவரை அதிபராக கல்வித் திணைக்களம் நியமித்தது. அப்பொழுது உப அதிபராகப் பணியாற்றியவர் தான் அதிபராக இருக்க விரும்பி மாணவர்களை பகிஷ்கரிக்கச் செய்தார். அதன் காரணமாக புதிய அதிபரையும் பகிஷ்கரிப்புக்கு காரணமான உப அதிபரையும் இடமாற்றஞ் செய்து என்னை பாடசாலையை பொறுப்பேற்கும்படி பணித்தது கல்வித் திணைக்களம். சில வருடங்கள் பதில் அதிபராக கடமையாற்றியதும் இரண்டாந்தர அதிபர் பதவி கிடைத்தது. அப்பொழுது எனக்கு உதவியாக திரு. சபாரத்தினஐயா அவர்கள் உப அதிபராக கடமையாற்றினார். ஆசிரியர்கள், அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம் ஒத்துழைப்புத் தந்தனர்.

பாடசாலையிலிருந்து நகுலேஸ்வர றோட் வரை உள்ள பாதை கல் போட்டு செப்பனிட அபிவிருத்திச்சபை உதவியது. முன்பக்கக் கேற் அலுமினிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலை அதிபர் திரு. லிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. பின்பக்கக் கேற் திருமதி கலாதரன் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது.

கருகம்பனையைச் சேர்ந்த திரு. அற்புதநாதன் அவர்களால் நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. மில்க்வைற்சோப் அதிபர் அவர்களால் குழாய் மூலம் நீர் குடிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது. பாடசாலை விளையாட்டிடம் கல்லுடைக்கப்பட்டு பெருப்பிக்கப்பட்டது. (அபிவிருத்திச்சபை உதவியால் சீமெந்துத் தொழிற்சாலை இயந்திரம் கொண்டுவரப்பட்டு கற்கள் உடைக்கப்பட்டன) என்ஜினியர் இரத்தினம் அவர்களின் உதவியால் இருமாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டது. நீர் இறைக்கும் இயந்திரம் களவு போனமையால் திரு. சிவமகாராசா அவர்களால் நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டு அபிவிருத்திச் சபை உதவியால் கிணற்றுள் தோண்டப்பட்டு அதற்குள் வைத்து கதவுகள் போடப்பட்டு பாதுகாக்கப்பட்டது. திரு. வரதராசா அவர்களும் பழைய மாணவர்களும் சேர்ந்து விளையாட்டுப்போட்டி நடாத்த பண உதவி வழங்கினர்.

கருகம்பனையைச் சேர்ந்த திரு. ஜெயம் என்பவர் தனது மகளின் ஞாபகார்த்தமாக க.பொ.த சாதாரண வகுப்பில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்க்கு பணவுதவி வழங்கினார்.

போர்ச்சூழல் காரணமாக சீமெந்துத் தொழிற்சாலை உதவியால் வழங்கப்படவிருந்த சிறுவர் பூங்கா, எஞ்சினியர் இரத்தினம் அவர்களால் கட்டப்படவிருந்த காணியைச் சுற்றிவர போட இருந்த அரை மதில், திரு. சிவமகாராசா அவர்களின் உதவியால் கட்டப்படவிருந்த பெண்களுக்கான மலசலகூடங்கள் என்பன நிறைவேறாமல் போனமை எமது துரதிஷ்டமே. பின் 1990ஆம் ஆண்டில் பாடசாலை இடம்பெயர வேண்டியிருந்தது. அதனால் இளவாலை வேளாங்கன்னி மண்டபத்திலும் பின் அங்கிருந்து இடம்பெயர்ந்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மாலைநேர பாடசாலையாகவும் இயங்கி பின் மாணவர் வரவு குறைவதால் பாடசாலையை ஒன்றுசேர்த்து நடாத்தும்படி பலபக்கத்தாலும் வற்புறுத்தல் ஏற்படவே 1991ஆம் ஆண்டு சிறுவிளான் கனகசபையை தேர்ந்தெடுத்தோம். அந்தப் பாடசாலை வசதியான கட்டடத்துடன் ஐந்தாம் வகுப்பிற்குட்பட்ட மாணவர்களைக் கொண்டு விளங்கியதால் எங்களுக்கு வசதியாக இருந்தது. அந்த அதிபர், பெற்றோர் உதவியுடன் ஒரு விளையாட்டுப் போட்டியையும் சிறப்பாக நடத்தினோம். பின் அங்கிருந்து இடம்பெயர்ந்து அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கி பின் அங்கிருந்தும் இடம்பெயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் மான்ஸ் வித்தியாலயத்தில் மாலைநேரப் பாடசாலையாக இயங்கினோம். அங்கு கடமையாற்றும் போதே நான் இளைப்பாறும் காலம் நெருங்கியது. பொருட் பதிவேட்டின்படி (Inventory) ஆவணங்களை ஒப்படைக்க முடியாத நிலை, யார் பொறுப்பேற்க உடன்படுவர். எனது மாணவியான திருமதி ஜெகதாம்பிகை கலாதரன் அவர்கள் என்கீழ் பணிபுரிந்தபடியால் அவவிடம் பதவியை ஒப்படைத்துவிட்டு இளைப்பாறினேன். யான் இளைப்பாறியபின் பாடசலை அதிபர்களாக கடமையாற்றியவர் களையும், சிறப்பாக அதிபர் திரு. சிவபாதரத்தினத்தின் சேவையையும் பாராட்டாமல் இருக்க முடியாது. பாடசாலையின் தனித்துவம் பேண அதிபர் களுடன் ஒத்துழைத்த ஆசிரியர்களான காலஞ்சென்ற பார்வதிநாதசிவம், திருமதி கணேசதுரை, செல்வி தம்பாப்பிள்ளை, திருமதி இராசலட்சுமி பற்குணராசா இவர்களின் சேவையையும் பாராட்டாமல் இருக்க முடியாது. சொந்த இடமான கீரிமலையில் பாடசாலை இயங்கியபின் அதிபராக கடமையாற்றிய சு. ஸ்ரீகுமரன் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தற்பொழுது அதிபராக கடமையாற்றும் திருமதி யாமினி சதீஸ்குமார், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச்சங்கம் யாவருமே பாடசாலை முன்னேற்றம் கருதி முனைப்புடன் ஈடுபடுவதை அறிந்து மனம்மிக மகிழ்வதுடன் அமரர்களான அதிபர் கந்தையா, திரு. கனகசபை விதானையார் இவர்களின் ஆசைகள், கனவுகள் நிறைவேற இவர்கள் சேவையாற்ற எல்லாம் வல்ல நகுலேஸ்வரப்பெருமான் அருள்புரிய வேண்டுமென வேண்டுகின்றேன்.

**திருமதி த. இராமசாமி**
இளைப்பாறிய அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கு அச்சுறுத்தலாகும் கிருமிநாசினிகள்

*திருமதி ய. சத்தியசீலன்*

இரசாயனக் கிருமிநாசினிகளை இன்று உலகம் பூராகவும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். உயிர்ச் சூழலை மாசடையச் செய்யும் செயற்பாடாக கிருமிநாசினிப் பயன்பாடு அமைந்துள்ளது. கல்சியம், செப்பு, கந்தகம், டி.டி.ரி, அல்ட்றின், எல்ட்றின், மலத்தியோன், பறதியோன், பேகொன் போன்ற இரசாயனப் பொருட்கள் இன்று கிருமிநாசினிகளாக மாறியுள்ளன.

டி.டி.ரி, எல்ட்றின் போன்றவை மீன்களில் அதிகளவில் சேர்ந்து நச்சுத்தன்மையை ஏற்படுத்துகின்றது. இரசாயன வளமாக்கிகள் நீர் நிலைகளைச் சென்றடைந்து நீரை மாசடையச் செய்கின்றது. நீரில் மிதக்கின்ற அல்காக்கள் செழிப்பாக வளர்த்து தன் பரப்பை மூடி வளர்ந்து நீருக்குள் சூரிய ஒளி செல்வதை தடுக்கின்றது. அதனால் நீரில் கலந்துள்ள ஒட்சிசனின் அளவு குறைவுற நீர் நிலைகளில் வாழும் உயிரினங்கள் போதிய ஒட்சிசனைப் பெற முடியாது போகின்றது.

இரசாயனப் பசளைகளை அதிகளவில் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணங்கி பாதிப்படைவதோடு இயற்கை வட்டங்களும் குழப்புகின்றது.

கிருமிநாசினிகளை விசிறும் போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகளின் உடலில் நச்சுத்தன்மை கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கண்பார்வைக் குறைவு, மூச்சு விடுவதில் சிரமம், தசைப்பிடிப்புக்கள், ஓயாத தலையிடி என்பன இதன் விளைவாக ஏற்படுகின்றன. பிறக்கின்ற குழந்தைகளில் கூட இத்தகைய நச்சுத்தன்மைச் செறிவு அவதானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிருமிநாசினி செயற்திட்டத்தினர் (PAN) 12 கிருமிநாசினிகளை பாவிக்கக்கூடாது எனத் தடுத்துள்ளனர். இந்த பன்னிரண்டு கிருமிநாசினிகளும் Dirty Dozen என்று அழைக்கப்படுகின்றன. 2-475 DBCP, அல்றின், BHC, குளோடான், டி.டி.ரி, பறக்குவாட். எத்யின்ட், டிப்றோமைட், பறத்தியோன், பென்ரகுளோரோபெனோல், காம்ஹெலொர், குளோரோடெமிபோம் போன்றவையாகும். இவற்றில் ஆக நான்கின் பாவனையே இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பறக்குவாட் வெற்றுப் போத்தலில் நீரள்ளி அருந்திய ஒரு சிறுவன் இலங்கையில் மரண மடைந்தான். இலங்கையில் சந்தைக்கு வருகின்ற 75% காய் கறிகள், பழங்கள் கிருமி நாசினிகள் தெளிக் கப்பட்டவை. இலங்கையில் நிகழ்ந்த பரிசோதனைகளில் பயறு, கௌப்பி என்பவற்றில் மலத்தியோன் பெரிபொஸ் என்பவற்றின் செறிவு இருப்பது கண்டறியப்பட்டது. கருவாடு பழுதடையாதிருக்க மலத்தியோன் விசிறப்படுகின்றது. இலங்கையில் இனிப்புப் பண்டங்களுக்கும் மலிவான கோழிச்சாயம் எனப்படும் நிறம் சேர்த்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மீனைப் பழுதடையாது வைத்திருக்க பொமலின் பயன்படுத்தப்படுகின்றது.

**கிருமிநாசினிகளினால் ஏற்படும் பிரச்சினைகள்**

1. கிருமிநாசினிகளிலுள்ள நச்சுத்தன்மை, நீர், தாவரம், விலங்கு இனங்கள் ஆகியவற்றிற்கூடாக உயிர்ச்சூழலைப் பாதிக்கின்றது.
2. கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதால் வளி மாசடைகின்றது.
3. நீர் மாசடைகின்றது
4. காய்கறிகள், தானியங்கள், பழவகைகள் என்பவற்றில் நச்சுத்தன்மை செறிவாக காணப்படுகின்றது.

**கிருமிநாசினிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்**

1. கிருமிநாசினிகளை சரியாக மிகவும் தேவையான காலங்களில் பயன்படுத்தல் வேண்டும்
2. பூச்சிகள், களைகள் என்பவற்றினைக் கட்டுப்படுத்த பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தல்.
   உதாரணம் : விளக்குப்பொறிகளை பயன்படுத்தல்
   வேப்பெண்ணெய் விசிறல்
3. கிருமிநாசினி, பசளை என்பவற்றினால் ஏற்படும் தாக்கம் பற்றிய அறிவை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உழவு செய்யும் முறைகள், மரபியல் முறையில் எதிர்ப்புத்திறன் கொண்ட விதைகள், முறைகள் உயிரியல் முறைகள் ஒருங்கிணைந்த பூச்சி, நோய்க்கட்டுப்பாட்டு முறைகள் போன்றவற்றை மேற்கொள்ளல்.
5. சுற்றுச்சூழலில் நிலைத்திருக்காமல் விரைவில் சிதைந்து விடக்கூடிய கிருமிநாசினிகளை அறிமுகம் செய்தல்
6. இயற்கையான சேதனப் பசளைகளைக் கூடியவரை பயன்படுத்த வேண்டும்.

உயிர்சூழலுக்குத் தீங்கு செய்யும் கிருமிநாசினிகள் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு தூண்டுதலாகவுள்ளன. ஆனால் அவற்றை அளவு மீறிப் பயன்படுத்துவதால் உயிர்ச்சூழல் பல்வகை நோய்களுக் குள்ளாகி வருவதோடு சூழலை மாசடையவும் வைக்கின்றது.

மனிதனது ஒவ்வொரு தொழிநுட்ப நடவடிக்கையும் பூமியின் மரணத்தைத் துரிதப்படுத்துகின்றன என்பதை மனதில் இருத்திக்கொள்ளல் அவசியம்.

✣ ✣ ✣

## அம்மா



அன்பும் கருணையும் காட்டுபவர்
ஆதரவாக இருப்பவர் அம்மா
இன்சொல் பேசுவார் அம்மா
ஈகை கொடுப்பவர் அம்மா
உணவை ஊட்டி விடுபவர் அம்மா
ஊக்கமுடன் பள்ளி அனுப்புபவர் அம்மா
எண்ணங்களுக்கேற்ப வழிகாட்டிடுபவர் அம்மா
ஏணிபோல எமை உயர்த்துபவர் அம்மா
ஐயம் போக்கி வைப்பவர் அம்மா
ஒற்றுமை வாழ்வைக் காட்டுபவர் அம்மா
ஓதி வாழ்வதை ஊக்குவிப்பவர் அம்மா
ஒளவை உந்தன் பாட்டி என்று அறிய வைத்தவர் அம்மா
அம்மாவைப் போற்றுவோம் அனுதினம்

**ந. திலக்சிகா**
தரம் -10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினையாக்கும்

எந்தவொரு செயலும் வெற்றிபெற வேண்டுமாயின் முயற்சி செய்ய வேண்டும். நாம் முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை. வெற்றியின் நுழைவாயில் முயற்சி என்பர். முயற்சி செய்தால் அதற்குரிய பயன் கட்டாயம் கிடைத்தே தீரும். முயற்சி திருவினையாக்கும், முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார், "முயலாதவர் வாழ்க்கை திருந்துதல் இல்லை" என்பன போன்ற முதுமொழிகள் முயற்சியாக அவசியத்தை நன்கு விளக்குகின்றன. வழியில் வெற்றி அடைபவர்கள் நினைத்த சுகம் பெறலாம். ஆனால் முயற்சி எனும் நேர்வழியில் வெற்றியடைபவர்கள் மட்டுமே நிலைத்த சுகம் பெறுவர். முயற்சி உடையோரே வாழ்வில் உயர்ச்சி பெறுவர். இந்த உண்மையை மாணவர்கள் நன்கு மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

பறவையைப் பாருங்கள் அது மேலும் மேலும் உயரத்தில் பறக்க முயற்சி செய்கிறது. மீன்கள் நீரில் இலாவகமாக நீந்த முயலுகின்றன. குயில்பாட, மயில் ஆட முயற்சி செய்கிறது. இவ்வாறு ஒவ்வோர் உயிரினமும் மென்மேலும் முன்னேற முயலுகின்றது. குழந்தை தன் முதற் பருவத்தில் தவழ்ந்து பின் எழுந்து நடைபயிலத் தொடங்குகிறது. பலமுறை தவறி கீழே விழுந்தும் குழந்தை தன் முயற்சியைக் கைவிடுவதில்லை. அது தானே முயன்று நடக்கப் பழகுகின்றது. இது இயற்கையாகவே நடக்கும் அற்புதச் செயலாகும்.

சிலந்தி பலமுறை முயன்று வலையைப் பின்னி, தன்னைக் காத்துக்கொள்ள எண்ணுகிறது. நாம் மட்டும் ஏன் சோம்பி இருக்கவேண்டும். முயற்சி உயர்ச்சி தரும் என்பது உறுதி. கடலில் மூழ்கி முத்தெடுப்போரையும் கடலில் வலைவீசி மீன் பிடிப்போரையும் வயலில் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாடுபடும் விவசாயிகளையும் எண்ணிப் பாருங்கள். விளையாட்டு வீரர்கள், விண்வெளி வீரர்கள், கலைஞர்கள் போன்றோர் ஓயாது முயன்று உன்னத நிலையை அடைகின்றனர்.

நாம் கொண்டுள்ள இலட்சியத்தை குறிக்கோளை எய்த வேண்டுமாயின் தொடர்ந்து சோர்வின்றி முயற்சிக்க வேண்டும். தோல்வியைக் கண்டு மனம் சோர்ந்து விடக்கூடாது . பயம் கொள்ளல் ஆகாது. தோல்வியே வெற்றியின் முதற்படி எனக்கருத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக உழைக்கவேண்டும். கருதிய கருமம் கைகூடும் வரை தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். ஓயாத முயற்சியின் மூலம் உலக வரலாற்றில் உன்னத இடம் பெற்றோர் பலரை நாம் அறிவோம். அவர்களது வழிகளைப் பின்பற்றி நாமும் முயற்சி செய்ய வேண்டும் அறிவியல் துறையில் அற்புதம் நிகழ்த்திய அகிலம் போற்றும் வண்ணம் சாதனைகள் நிகழ்த்திய தலைவர்கள் எல்லாம் முயற்சியின் மூலமே முன்னிலைக்கு வந்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

J. யோவனியா
தரம் - 10

## மனிதா!

ஆறுதலைத் தேடாதே மனிதா!
ஆறுவதற்கு இருக்கிறது கல்வி
நேற்றையை மறந்துவிடு
இன்றையை மதித்து நட
நாளை உனக்கு நன்றாகும்
கல்வியினால் முன்னேறு
காலம் உன்னை வாழ்த்தும்
நல்விதமாய் வாழ்வாய்
நாளும் இதை மறவாதே.



ஈ. வானுப்பிரியா
தரம் – 09

☆ ☆ ☆

## உலகின் அதிசயங்கள்

**புராதன அதிசயங்கள்**

1. ரோட் என்ற இடத்தில் உள்ள கிரேக்கக்கடவுள் ஆகிய சூரியனின் சிலை 32m உயரம்
2. அலெக்சாந்திரியா நகரில் உள்ள 134m உயரமான கலங்கரை விளக்கு
3. பிலோன் தேசத்து தொங்குதோட்டம் 24 90 அ உயரம்
4. எபிசஸ் என்ற இடத்தில் உள்ள ஆர்டிமிஸ்ஸின் ஆலயம் $104 \times 60m^2$ பரப்பளவு 18m உயரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எகிப்தில் உள்ள கூவு மன்னனின் நினைவுச் சின்னமாகிய கூம்பகம் 12 ஏக்கர் விஸ்தீரணம்
6. கலிகர்ணாசஸ் என்ற இடத்தில் உள்ள மன்னர் மௌசோலசின் சலவைக்கல்லால் ஆன கல்லறை
7. ஒலிம்பியாவில் உள்ள ஷியஸ் கடவுளின் 12m உயரமான சிலை

## தற்கால உல அதிசயங்கள்

1. எகிப்தின் பெரிய கூம்பகமும் அதனை அண்டியுள்ள சிங்கமுக வடிவமும்
2. இஸ்தாஸ்புல் என்ற இடத்தில் உள்ள அறிவின் தேவாலயம் தற்போது அரும்பெரும் காட்சியகம்
3. இத்தாலியில் உள்ள பைசா நகரத்து சாய்ந்த கோபுரம்
4. இந்தியாவில் ஆக்ரா நகரத்தில் உள்ள தாஜ்மகால்
5. வொஷிங்டன் நகரில் உள்ள ஜனாதிபதி வொஷிங்டனின் ஞாபகச் சின்னம்
6. பாரிஸ் நகரில் உள்ள ஈபெல் கோபுரம்
7. நியூயோர்க் நகரத்தில் உள்ள எம்பயர் ஸ்ரேற் கட்டிடம்

## வாக்களிப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஏழு அதிசயங்கள்

1. தாஜ்மகால்
2. சீனப்பெருஞ்சுவர்
3. ரோம் நகரத்து விளையாட்டரங்கம்
4. ஜோர்தான் நாட்டின் பீற்றா என்ற இடத்தில் உள்ள மென்சிவப்பு சிதைவுகள்
5. ரியோ டி ஜெனரியோ நகரத்தில் உள்ள கிறிஸ்துவின் சிலை 30m
6. பெரு நாட்டில் அண்டீஸ் மலையில் உள்ள இன்கா நகரச் சிதைவுகள்
7. மெக்சிக்கோவின் சிச்சென் இற்றாவின் மாயன் நகரம்

**ஜெ. டிபினியா**
**தரம் – 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் மனித செயற்பாடுகளும்

இயற்கை இறைவனால் உயிர்களுக்கு வழங்கப்பட்ட நன்கொடையாகும். விரிந்து பரந்து கிடக்கும் நிலப்பரப்பு, வானுயர்ந்து நிற்கும் மலைத்தொடர்கள், பச்சைப்பசேல் என்று காணப்படும் பசும்புல் தரைகள், வானமே தெரியாது மூடிக் கவிழ்ந்து கிடக்கும் காடுகள், அங்கு சஞ்சாரம் செய்யும் பூச்சிகள், பாம்புகள், பறவைகள், விலங்குகள், சலசல என்று பாய்ந்தோடும் ஆறுகள், குதித்து பாய்ந்துவரும் அருவிகள், தரையின்கீழ் புதைந்து கிடக்கும் கனியவளங்கள், வையகத்தின் ஆரமாக வளைந்து நிற்கும் சமுத்திரங்கள், கடல்கள், மண்ணின் போர்வையாக அமைந்துள்ள வளிமண்டலம் எல்லாமே இயற்கைச் செல்வங்கள் ஆகும்.

எத்தனை எத்தனை வளங்கள் எல்லாமே நமக்காகப் படைக்கப்பட்டவை. ஆனால் எல்லாவற்றையும் நாமே அனுபவிக்க வேண்டும் என்ற சுய நல நோக்கோடு செயற்படுகின்றோம். ஆனால் எதிர்கால சந்ததி ஒன்று உண்டு என்பதை நாம் மறந்துவிட்டோம்.

"பகுத்து உண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" என்கிறார் திருவள்ளுவர். எனவே இயற்கை வளங்கள் எல்லோர்க்கும் வேண்டும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் இயற்கை வளங்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் வரையறை அற்ற மனித செயற்பாட்டினால் இயற்கை சமநிலை குழம்புகிறது. இயற்கையைச் சீண்டி வேடிக்கை பார்க்கின்றோம். அதனால் இயற்கைச் சீற்றம் கொள்ளத் தொடாங்கிவிட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தங்கள், நிலநடுக்கங்கள் காட்டுத்தீ பரவுதல், எரிமலைக் குமுறல் போன்றன அதன் எதிர்மாறான விளைவுகளே ஆகும். ஆறறிவு படைத்த மனிதர்கள் தமது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை சுயதேவைக்காக மட்டுமே பயன்படுத்துகின்றார்கள். எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற எண்ணம் சிறிதளவும் இல்லை. வளங்களை சரியான முறையில் எதிர்கால விளைவுகளைச் சிந்தித்துப் பார்த்து பயன்படுத்தத் தவறிவிட்டோம். நிலம், நீர், வளி ஆகிய மூன்றும் மாசடைவதற்கு மனித செயற்பாடுகளே காரணம் எனலாம்.

பரந்து விரிந்த நிலப்பரப்பு, உயிரினங்களின் வாழ்விடம் ; பயிர்களின் இருப்பிடம்; மனிதர்களின் உறைவிடம். இது இயற்கையின் நன்கொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அதைப் பாதுகாப்பது மனிதனின் கடமை. ஆனால் சனத்தொகை அதிகரிப்பு, வீதி அபிவிருத்தி, இருப்பிட வசதி, தளபாட உற்பத்தி, எரிபொருள் தேவை, உணவு உற்பத்தி, மூலிகைகளைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றுக்காக இயற்கையால் வழங்கப்பட்ட காடுகள் அழிக்கப்பட்டு மாசுபடுத்தப்பட்டுவிட்டன. சதுப்புநிலப் பிரச்சினை, குப்பை கூழங்களின் பெருக்கம், காலநிலை மாற்றம், ஆவியுயிர்ப்பு செயற்பாடுகள் தடைப்படுதல் ஆகிய தீய விளைவுகளுக்கு மனித செயற்பாடுகளே காரணமாகி விட்டன.

இன்றைய அணுசக்தி யுகத்தில் அணுக்கதிர்வீச்சு, போர்க்கருவிகளின் பயன்பாடு, களைகொல்லி, கிருமி நாசினிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியாத உக்கிப் போகாத பொருட்களின் பாவனை அதிகரிப்பு ஆகியவற்றால் நிலத்தில் உள்ள சிறிய நுண்ணுயிர்கள் கூட அழிந்துவிடுகின்றன. நிலம் பலமற்று போகின்றது. சதுப்பு நிலங்களிலும், சிரட்டை, கோம்பைகளிலும் நீர் தேங்கி நிற்பதனால் நுளம்புகளின் பெருக்கம் மலேரியா, டெங்கு போன்ற தொற்று நோய்கள் பெருகும் அபாயம் ஆகியன வற்றுக்கு மனித செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன.

மனிதன் இயற்கையில் எதையும் விட்டுவைக்கவில்லை. அவனது செயற்பாடுகள் நீர் நிலைகளுக்கு கூட அச்சுறுத்தலாக அமைகிறது. தொழிற்சாலைக் கழிவுகளைக் கொட்டுதல், அணுப்பரிசோதனைகள், சாயங் களில் உள்ள இரசாயனக் கலவைகள் அமிலங்கள் ஆகியன நீரில் கலந்து நீர் நிலைகளைப் பாதிப்படையச் செய்கின்றன. பல்வேறுவிதமான நோய்கள் வாந்திபேதி, இளம்பிள்ளை வாதம், மஞ்சட் காமாலை ஆகியன பெருக வாய்ப்புண்டாகிறது.

நிலத்தின் கீழும் நீரின் கீழும் கனியங்கள் அகழப்டுகின்றன. நில அமுக்கம் நில நடுக்கம் ஏற்பட வழிவகுக்கின்றது. எனவே இன்றைய அனர்த்தங்களுக்கு எல்லாம் இயற்கைச் சமநிலையை குழப்புகின்றன. இவற்றுக்கு மனித செயற்பாடுகளே காரணம் எனலாம்.

வளிமண்டலம் அளித்த ஒரு போர்வை ஓசோன் படையாகும். மீயொலி விமானங்களின் செயற்பாடுகள், தொழிற்சாலைப்புகை, குளிரூட்டிகளில் இருந்து வெளியேறும் குளோரோ புளோரோ காபன், பழுதடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை ஆகியவற்றால் வளி மண்டலத்தில் உள்ள ஓசோன்படை பலமிழக்கிறது. இதனால் வெப்பம் அதிகரிக்கிறது. கடல்மட்டம் உயருகின்றது. இதன் விளைவே இன்று காலத்துக்கு காலம் இடம்பெறும் ஆழிப் பேரலை அனர்த்தங்கள் எனலாம்.

இன்று இயற்கையில் மனித செயற்பாடுகளால் இயற்கையின் பாதுகாப்பு கேள்விக்குரியதாக மாற்றம் அடைந்துள்ளது. இயற்கையைப் பற்றிய சிந்தனை சாத்தியமான செயல் வடிவமாக மாற்றம் பெறவேண்டும் என்ற நோக்கில் இயற்கைப் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகள் காலத்துக்கு காலம் நடைபெறுகின்றது.

இயற்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையுமாகும். சிறந்த அணுகு முறைகளைக் கையாண்டு தீர்வு காண திறன்களைக் கண்டறிதல் வேண்டும். எமது மகிழ்வான வாழ்க்கைக்கு அடித்தளமாக இயற்கை இறக்கிவிட முடியாத சுமைகளை சுமக்கும் நிலையில் உள்ளது. இதற்கு இயற்கையோடு ஒட்டாத மனித வாழ்க்கையே காரணம். எனவே இயற்கையை ரசிக்கும் உணரும் திறன் உள்ளதாக மனித செயற்பாடுகள் செப்பனிடப்பட வேண்டும்.

**ச. சுனிதா**
**தரம் – 11**

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதை நழுவவிடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம் அதை சென்று முடியுங்கள்
வாழ்க்கை ஒரு விடுகதை அதை விடுவியுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு அதில் ஈடுபடுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் அதை வென்று காட்டுங்கள்
வாழ்க்கை ஒரு வெகுமதி அதை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கலை அதை அழகுபடுத்துங்கள்
வாழ்க்கை ஒரு வேதனை அதை தாங்கிக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சவால் அதை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் அதற்கு மனம் தளராதீர்கள்
வாழ்க்கை ஒரு பிரச்சினை அதற்கு தீர்வு காணுங்கள்.

**S. Jeniska**
Grade - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. அன்றாடம் தீப்பிடிக்கும் மாளிகையில் அறுசுவை விருந்தளிக்கின்றது? அது என்ன?

அடுப்பு

2. அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாது அது என்ன?

காற்று

3. முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தைப் பளிச்சென்று காட்டுவான் அவன் யார்?

கண்ணாடி

4. ஆத்தாள் தெருவிலே மகள் கொலுவிலே அவர்கள் யார்?

வைக்கோல், நெல்

5. அண்ணன் தம்பி இருவர். இவர்களைச் சுற்றிப் பன்னிருவர் அவர் யார்?

கடிகாரம்

6. வில்லாய் வளைபவன் ஒருபோதும் வளைந்து போகமாட்டான் அவன் யார்?

நாணல்

7. ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒரே சங்கிலி அது என்ன?

மழை

8. சின்னவாயில் ஊட்டி விடும் உணவை ஜீரணம் ஆகாமல் வைத்திருப்பான் அவன் யார்?

உண்டியல்

9. அண்ணன் தம்பி அடுத்தடுத்த வீட்டுக்காரர். ஒருத்தர் வீட்டுக்கு மற்றயவர் போகமுடியாது அது எது?

தண்டவாளம்

10. வளமாய் வளர்த்தமரம் வாசற்காலுக்கு உதவாத மரம்?

வாழைமரம்

**நா. ஜிந்துஜன்**
தரம் – 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

சின்னச் சின்ன துகள்களாய்
சிதறிக் கிடந்த எம்மை
மெல்ல மெல்ல அணைத்து
மெதுவாய் கருவில் சேர்த்து
உருவாய் சிசுவாய் உருவாக்கியவர் அம்மா.

எட்டி எட்டி நாம் உதைத்தாலும்
எள்ளளவும் கோபமின்றி
தடவித்தந்து தாங்கி கொள்பவர் அம்மா

அ. என அடியெடுக்கும் மழலையவன்
ஓதும் வார்த்தை அம்மா
அன்பின் பொக்கிசமாய் - எமை
கருவறையில் சுமந்தவள் அம்மா

ஆலயத்தின் ஓவியமாய்
இறைவனின்மறு உருவமாய்
எம் இல்லமதில் ஒளிர்பவள் அம்மா.

சி.யாழினி
தரம் - 9

தன் பசி தாகம் மறந்து
பாசத்தின் உச்சப் புள்ளியில்
பண்பாடு சொல்லித் தருபவள் அம்மா
மழலையின் குறிப்பறிந்து
குறைகள் தீர்க்கும் ஒளிதீபம் அம்மா.

★ ★ ★

# சவ்வரிசி

பாயாசம் தயாரிக்கப்படும் சவ்வரிசி ஒரு தானியத்தின் பகுதியல்ல. சிலவகை மரங்களின் தண்டின் நடுப்பகுதியில் சேமிக்கப்படும். மாப்பொருளில் இருந்தே சவ்வரிசி தயாரிக்கப்படுகிறது. தூய சவ்வரிசி இந்தோனேசியாவில் வளர்கின்ற சாகோ பாம் எனப்படும் தாவரத்தில் இருந்து பெறப்படுகின்றது. இத்தாவரத்தின் தாவரவியல் பெயர் Metro - Xylam Sagu ஆகும். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களில் 9 மீற்றர் உயரம் வரை வளரக்கூடிய தாவரத்தில் பூந்துணர் தோன்றும். அப்போது தாவரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு தண்டு பிரிக்கப்பட்டு சோறு எனப்படும் நடுப்பகுதி பிரித்தெடுக்கப்படுகிறது. இது இடித்து தூளாக்கப்படுகிறது. இத்தூளில் நார்கள் காணப்படும். இத்தூள் நீரோடு சேர்த்து பிசைந்து அரிதட்டு ஒன்றினூடான வடிகட்டப்படும் போது நார்கள் பிரித்து அகற்றப்படும். இவ்வாறு பலமுறை அலசியபின் மாப்பொருள் பெறப்படும். இது உலர்த்தப்பட்டு மீண்டும் இம் மாப்பொருள் நீர் சேர்க்கப்பட்டு பிசைந்து அரிதட்டினூடாக செலுத்தும்போது சவ்வரிசி மணிகள் உருவாகும். இது உலர்த்தப்படும். தாவரங்களில் தோன்றும் பூக்கள் காயாகிவிட்டால் தண்டில் மாப்பொருள் அகற்றப்படும். எனவே சாகோ பாம் மரம் காய்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. அம்மரம் காய்த்தால் எமக்குச் சவ்வரிசி கிடைக்காது.

**செ. டிலக்சிகா**
தரம் - 06

✦ ✦ ✦

## ஆசான்

அறிவு என்னும் பயிரை வளர்த்திடும் தெய்வம் - ஆசானடா
அழியாத செல்வத்தை தருபவரும் அவரடா
நற்குணங்கள் அனைத்தையும் கற்றுத்தருபவரும் - ஆசானே
நற்பிரஜையாய் வாழ வைப்பவரும் இத்தெய்வமடா.

நம்மை உயர்த்திடாத ஆசான் உண்டோ மானிடா
நம் கனவை நினைவாக்கும் ஆன்மாவும் இவரேயடா
கச்சிதமாய் எமை அழைத்து
கனிவோடு பழகிட வைப்பவர் ஆசானடா

இலட்சியத்தை நிறைவேற்றும் நிஜத் தெய்வமும் ஆசானடா
இனமத வேறுபாடின்றி கற்பிப்பவரும் ஆசானடா
அறிவென்னும் மரத்திற்கு ஆணிவேரும் அவரே
கல்வியென்னும் தீராத பசிக்கு உணவும் அவரே



தம் மெய்வருத்தம் பாராது பள்ளிக்கு
ஓடோடிவந்து கல்வியைப் புகட்டுபவர் ஆசானடா
இத்தெய்வத்தை உலகில் மறக்கலாமா - மானிடா
என்றென்றும் இவ்வாசானை மறவோமடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிற்கு ஆதரவும் நீயே
உயர்வுக்கு ஊன்று கோலும் நீயே
நற்தொழில் என்ற தேருக்கு அச்சாணியும் அவரே
நல்வாழ்வு என்ற பயிருக்கு பசளையும் அவரே
என்றென்றும் ஆசானை மறவோமடா.

அ. ஜான்சிகா
தரம் -10

✦ ✦ ✦

## மனத்தவிப்பு

உன்மடிமீது எனை பத்துமாதம் சுமந்து
நான் பள்ளி சென்று வரும் வரையில்
பார்த்துக் கொண்டு இருந்து
உயர் கல்வி கற்க வழிவழியாய் தொடர்ந்து
பட்டம் பெற்ற போதும் மடிமீது சாய்த்து
பிறந்தது முதல் இறப்பது வரை
கண்ணை இமை காப்பது போல்
காத்த எனது தாயை காணாத மனம் தவிக்கிறது
உனை விழிமேல் விழிவைத்து தேடுகின்றேன்
உன்னைப் பிரிந்து மனம் வாடுகின்றேன்
உனைக் காணும் நாள் வரும்எனத் தெரியவில்லை
எனது தாயைக் காணும் நாளில்
இறைவனே உமக்கு நன்றி செலுத்துவேன்.

கீர்த்தனா
தரம் - 9

✦ ✦ ✦

## சூழல் மாசடைதலும் பாதுகாத்தலும்

நகர்பபுறங்களில் அதிக வாகனங்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படு கின்றன. சில வாகனங்கள் அதிக புகை, எண்ணெய், டீசல், கசிவு போன்ற காரணத்தாலும் உடைந்த சில்லுகள் பாவனைக்கு உதவாதவிடத்து உரிய முறையில் அகற்றப்படாததாலும் சூழல் மாசடைகிறது.

வீடுகள், தொழிற்சாலைகளின் நிர்மாணப் பணிகள் செய்வதாலும் மிகுதியாகும் கல், மண், சீமெந்து முதலியன எளிய முறையில் அகற்றப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் சூழல் மாசடைகிறது. மற்றும் குப்பபைளின் சேர்க்கைகள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதாலும் நிலம் குன்றும் குழியமாக இருப்பதாலும் கழிவுகள் சேர்ந்து சூழல் மாசுபடுகிறது. கிருமிநாசினிகள் பயன்படுத்துவதாலும் சூழல் மாசடைகிறது.

இவற்றை தவிர்த்து நாம் வீட்டையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும். சூழலை மாசுபடுத்தாத மாற்று வழிகளை நாமத் கண்டுபிடிக்க வேண்டும்.

தே. வஸ்ணவி
தரம் - 05

✦✦✦

## *பள்ளி செல்ல மறவாதே*

பள்ளி செல்லும் வயதினிலே
கல்வி கற்க வேண்டுமடா
படிக்கும் காலம் பொற்காலம்
பாலா நீயும் உணர்ந்திடுவாய்

தொல்லை தரும் தொழில்களிலே தினம்
தொடர்பு கொள்ளல் ஆகாது
பள்ளி நாளும் சென்றிடுவாய் - பாரில்
படித்து நன்கு உயர்ந்திடுவாய்



கல்வி நமக்கிரு கண்ணாகும்
கல்வி இன்றேல் அவை புண்ணாகும்
கல்விச் செல்வம் ஒன்றேதான் நாம்
கடைசி வரைக்கும் வந்திடுமே.

பள்ளி செல்லாச் சிறுவர்கள் உலகில்
பட்டபாடு தெரியுமா
மூட்டை சுமந்து திரிந்தனர்
முதுகும் வளைந்து வருந்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு இதனை உணர்ந்திடுவாய்
நன்றாய் கல்வி கற்றிடுவாய்
பள்ளி செல்ல மறவாதே, நாளும்
படித்து நீயும் உயர்ந்திடுவாய்.

ஜெ. டிலான்சன்
தரம் -05

✦✦✦

# My Pet



1. My pet is a dog
2. My uncle gave it to me
3. Its name is Jute
4. It is brown and white in Colour
5. It is six months old now
6. I have two bowls for it
7. One is for food and the other is for water
8. I bathe it every Sunday
9. It sleeps in a basket
10. It sleeps during the day
11. It guards our house at night
12. It has a lot of exercise
13. I play with it every evening
14. When I throw a ball. It brings the ball back to me
15. When I come home from the school it welcome me
16. I take it to the beach every Saturdays
17. I like my pet very much

Thank you

T. Tharjithan
Grade 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பாடல் இணையம் ஆகியவற்றின் சுருக்கக் குறியீடு

**N. Thujina**
*Grade - 11*

| | | |
|---|---|---|
| CDMA | - | Code Division Multiple Access |
| GSM | - | Global System For Mobile Communication |
| LAN | - | Local Area Network |
| WAN | - | Wide Area Network |
| TCP | - | Transmission Control Protocol |
| IP | - | Internet Protocol |
| SMTP | - | Simple Mail Transfer Protocol |
| RAM | - | Random Accesss Memory |
| ROM | - | Read Only Memory |
| CD | - | Compact Disk |
| DVD | - | Digital Video Disk |
| CLI | - | Call List Identification Code |
| MMS | - | Multi Media Messaging Service |
| SMS | - | Short Message Service |
| ESN | - | Electronic Serial Number |
| MIC | - | Mobile Identification Code |
| IMET | - | Information Mobile Equipment Identify |
| GIT | - | General Information Technology |

✦✦✦

# Cleopatra

Willam Shakepeare, the play Wright Wrote 37 plays. They are Categorized as comedies. tragedies and histories. A comedy, is a play (story) that has a happy ending and tragedy is a play (story) that has a sad ending. sometimes it is not easy to decide the category; some histories like the plays Julius Caesar, Antony and Cleopatra.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cleopatra the empress of Egypt is considered one of the most beautiful women who ever lived. she was not only beautiful, she was intelligent too. The former rulears, of Rome, Caesar and mark Antony Were in love with her.

The people in Rome Were Curious about Cleopata. They Wanted to Know why their beloved rulers fell in love with this Foreign woman.

Enorbabus, who had seen Cleopatra sailing in her barge on the Nile described her. The poetry of Enorbabus makes Cleopatra more beautiful in the minds of people.

**S.Nirusha**
*Grade 11*

✦✦✦

# Teaching Profession.

**Mrs. Subajini Gowrykanthan**

In the modern world we encounter somany professions all of which flourish for the betterment and welfare of humanity. Some professions are identified as noble professions. Medical profession is such a one, because it brings direct benefit to mankind and probes into the mysteries of human physiology. Florence Nightingale, "The lady with the lamp" is still honoured for her selfless service for the wounded in the French war. Teaching is another such noble profession. But over the past few decades teaching profession has deviated considerably from the traditional methods of teaching using black board and chalk.

The essential fact about teaching profession is that it deals directly with human minds. Human minds can contemplate and it is this capacity which differentiates man from the brute. This power of contemplation must be channeled in the proper direction so that man



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

may gain experience, Knowledge and wisdom. It is accepted that this wisdom nurtures, the spirit and soul of a man and accompanies him even after death.

when man was born on this earth he was no better than a brute. His experiences in life gained him knowledge. knowledge is infinite. There is no termination for knowledge. The horizon of knowledge widens and expands endlessly and is still expanding what was thought as knowledge yesterday seems out dated for today"s requirements.

The important function of teaching profession is imparting knowledge. Human minds are receptacle for knowledge even at an age three. This is evident from the fact that very small children like to hear stories. Teaching does not mean simply dinning knowledge into the ears of Children. Teaching materials for educating children are graded according to the maturity of the minds of students. Teaching is also graded to suit the level of maturity of human minds. from time to time the methods of teaching are reviewed and modified according to the needs of the community. Teaching profession also adjusts itself to satisfy the needs of education. Appropriate education system is very essential if the state wants to improve its economy, That is why the government of all countries are taking steps to improve their system of education. Incentives like free books, free education and supply of uniforms are some such steps.

Teaching needs to concern itself with the winning of the minds of children. Teachers must impress the children with their knowledge, ability and efficiency. Unlike the children of yester years, present day children can easily identify the drawbacks in teaching methods. They prefer the modern methods of teaching using computers, multi media, television, O. H. P and dislike to the traditional methods of blackboard and chalk. It is very urgent that a teacher must equip himself with all modern methods in teaching if the teaching profession is to flourish. It must be understood that each and everybody cannot be a successful teacher although self educating methods have come into the scene in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

western countries everybody realizes that studying under the guidance of a teacher is more beneficial.

Teaching profession is no longer confined to the four walls of a classroom or to the universities. Many institutions and organization have taken the responsibility of educating those who are anxious to learn. There are enthusiastic learners who are bent on updating their knowledge with modern techniques. The The master crafts man teaches the apprentices the techniques of handicrafts. The recent theory of education says that knowledge is an accumulation of experiences.

Teaching profession, unlike other professions needs humanitarianism because it deals directly with human minds which become equipped with Knowledge necessary for the advancement of humanity at large An adequate knowledge of humanity at large, An adequate knowledge of psychology to read the minds of the learner is also essential for teaching profession. Teaching profession needs the finer aspects of tolerance. selfless service carries a person long way in the teaching career. Teaching professions eradicates ignorance and illiteracy and gives enlightenment to the soul and mind and therefore it is becoming highly honoured.

✦✦✦

## பிச்சை புகினும் கற்கை நன்றே

கரடு முரடான பாதையில் ஓர் சிறிய கொட்டில் சைக்கிள் கடை. அந்த கடைக்கு முதலாளி தேவன். அவன் மிகவும் அன்பானவன். தனது ஊர்க்காரர் சரி உறவினர் சரி எல்லோரிடத்திலும் மிக நேசமாக இருந்தான். தேவன் மீது எல்லோருக்கும் நல்ல விருப்பம் இருந்தது. இவனது கடையில் ஊர்க்காரனான மோகன் கூலியாக வேலை பார்த்தான்.

மோகன் இந்த ஊரிலேயே மிகவும் கஸ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். இவனுக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். இவன் மனைவி சீதா. இவனது பிள்ளைகள் ராணி, கீதா இவர்களின் மூத்தவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி. இந்த வருஷம் கல்வி பொதுத்தராத சாதாரண பரீட்சையில் தோற்றவுள்ளாள். இளையவள் கீதா ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறாள். மூத்தவள் ராணி படிப்பில் நல்ல அக்கறை கொண்டவள். அது மட்டுமல்லாமல் வீட்டு வேலையையும் தவறாமல் செய்து வருவாள். இளையவள் கீதா கொஞ்சம் படிப்பில் கவனம் குறைவு. ஆனால் ராணி அவளுக்கு புத்திமதி சொல்லி படிப்பு சொல்லிக்கொடுப்பாள்.

மோகன் தேவனின் சைக்கிள் கடையில் வேலை பார்ப்பதற்கு அவனுக்கு கிடைக்கும் சம்பளம் ஐநூறு ரூபாய்தான். அதில்தான் அவன் வீட்டுத் தேவைக்கும் பிள்ளைகளினது படிப்பு செலவுக்கும் சமாளித்துக் கொள்கிறான். சில நேரங்களில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் காசு கட்ட வேணும் அப்பா என்று கூறினால் இல்லையென்னாது இருக்கும் பணத்தை எடுத்து அவர்களுக்கு கொடுத்துவிடுவான். பின் இருப்பதை சமாளித்து ஒரு நேர சாப்பாட்டினை நிம்மதியாகச் சாப்பிடுவான். அவனது முழு நோக்கமும் தனது பிள்ளைகள் படித்து ஒரு பெரிய தொழிலுக்கு போகவேண்டும் என்பதாகவே இருந்தது.

இவன் மனைவி சீதா குடும்பத்தறிகு ஏற்ற மனைவியாக இருந்தாள். தனது குடும்பத்தை கண்ணும் கருத்துமாய் பார்த்தாள். விடிய 7.30 மணிக்கு மோகன் சைக்கிள் கடைக்கு வேலைக்கு போவான். அப்போது அவனது இரண்டு பெண் பிள்ளைகளையும் அருகில் உள்ள பள்ளிக்கூடத்தில் தன்னிடம் இருக்கும் சைக்கிளில் கொண்டு சென்று விட்டுவிட்டு கடைக்குச் செல்லுவான். சீதா விடியற்காலையிலே எழும்பி தனது தொழிலுக்கு செல்லும் கணவனுக்கும் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் சமைத்து அவர்களை வழி அனுப்புவாள்.

இவர்களின் வீடு ஓலையால் வேயப்பட்ட ஒரு சிறு குடிசை ஆகும். மழை நேரங்களில் மிகவும் துன்பப்படுவார்கள். இரண்டு மண்ணெண்ணெய் விளக்குகள். ஒரு விளக்கை சீதா அடுப்பங்கரையிலே தனது சமையல் தேவைக்கு வைத்திருப்பாள். மற்ற விளக்கு கீதாவும் ராணியும் தமது படிப்பிற்காக வைத்திருப்பார்கள். இவர்கள் படிக்கும் போது மோகள் வீட்டின் ஒரு ஓரத்தில் பாய் போட்டு இருந்து கொண்டு பார்த்து ரசிப்பான். தனது பிள்ளைகளை எப்படியாவது கஷடப்பட்டு படிப்பிற்கு ஒரு பயனைக் காண வேண்டும் என்று கடவளை "நீதான் எனக்கு உதவவேணும்" என்று அடிக்கடி இறைவனை வேண்டித் தவிப்பான்.

மோகனுக்கு பிள்ளைகள் பெரியாளாகி விட்டதால் அதிக பணம் தேவைப்பட்டது. அவனுக்கு சைக்கிள் கடையில் கிடைக்கும் சம்பளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியளவாக இருக்கவில்லை. அதனால் அவன் வயல் வேலைக்கும் சைக்கிள் கடையில் வேலை இல்லாத நேரத்தில் சென்றான். சீதாவிற்கும் பிள்ளைகளுக்கும் சரியான கவலை. மோகன் ஏற்கனவே ஒரு பெரும் நோயால் பாதிக்கப்பட்டு குணப்பட்டு வந்தவன். அவனுக்கு மீண்டும் நோய் வருமோ என்று கூட அவர்கள் வருந்தினார்கள். இரவு பகலாக ஓய்வு உறக்கம் ஒன்றும் இல்லாது மோகன் உழைத்தான்.

கீதாவிற்கும் ராணிக்கும் தமது தந்தை படும்பாடு மிகவும் வேதனையைக் கொடுத்தது. அவர்கள் தமது தந்தையின் நிலையை பார்த்து நன்றாக படித்தார்கள். ராணியும் பரீட்சையில் சித்தியடைந்தாள். நல்ல பெறுபேற்றையும் பெற்றாள். மோகனுக்கு தாங்கமுடியாத மகிழ்ச்சி. தான் வேண்டிய தெய்வம் தன்னை கைவிடவில்லை என்று மனைவியிடமும் கூறி மகிழ்ந்தான். அடுத்து கீதாவும் பரீட்சையில் சித்தியடைந்தாள். அவர்களால் சிறிது காலத்தில் இருவருக்கும் நல்ல அரசாங்க தொழில் கிடைத்தது. மோகனுக்கும் சீதாவுக்கும் வயதாகிவிட்டது.

ஊர் மக்கள் எல்லோரும் மோகனின் ஆர்வத்தையும் அவன் கஷ்டத்திலும் பிள்ளைகளைப் படிக்க வைத்து இப்படி ஒரு பெரிய ஆளாக மோகன் வந்தது ஊருக்கே உதவி செய்வதும் அவர்களால் பார்க்க முடியாத பேரின்பமாக இருந்தது. இப்போது அவன் தனது பிள்ளைகளை இவ்வளவு துன்பத்திலும் படிக்க வைத்த ஒரு நல்ல பயனை நன்றாக அடைந்துள்ளான். இனி அவனது வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியுமே இருக்கும்.


சி. ஜென்சிகா
தரம் - 11




தி. சஞ்ஜீவன்
தரம் - 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரூ. தர்சன்
தரம் - 06



ம. சஞ்சீவன்
தரம் - 06



ச. கபில்தாஸ்
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Great People

Isaac Newton
Albert Einstein
Thomas Alva Edison

All Three Scientists
Newton - with his great thinking
Einstein - with his absent mindedness
and Edison with the sprit of - 'Try and one day
you might fly"

Have made the world easier for us with their wisdom.

**C. Kapilthas**
Grade - 8

★ ★ ★

## Uses of Books

Reading books is a great and very interesting hobby. We can improve our knowledge about the whole world by reading books.

A good book is a good friend of man and a good guide for a successful life. They are useful to us in many ways.



Great books have been written by great writers. They are very wise experienced and intelligent persons. Books fill our minds with positive thoughts they are the best guides for us. Books help us to make a great revolution in our lives while providing us good advice.

**J. Dipiniya**
Grade - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Father


My father's name is Sundarajan
My father is a farmer
He takes good care of me
He works hard and sees to all needs
He play with me and takes me to the park

When I cry he carries me and wipes my tears
He is the best father in the whole world
He is the best I've got and I can never live without him.

**S. Vajikaran**
Grade - 03

★ ★ ★

# Poya



The Full Moon poya day
Is celebrated by many
In a very religious way
As this is a very special day

Dressed in pure white
Devotees go to temples
To observe sil and offer flowers
Hoping to find the true path
With wishes for everlasting peace
In their heart.

I Love poya
Because it's a Holiday,
And I can play
Throughout the day

**J. Dilanson**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினா விடைகள்

0. இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை எது? எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது?

உடுவில் மகளிர் கல்லூரி 1824ஆம் ஆண்டு

02. இலங்கையில் வெளியாகிய முதல் தமிழ்ப் பத்திரிகை எது?

உதயதாரகை

03. மிக வேகமாக செல்லக்கூடிய பாலூட்டி விலங்கு எது?

சிறுத்தைப்புலி

04. இந்துசமய கடவுளுக்கு வடிவங்கள் வரைந்தவர் யார்?

ரவிவர்மா

05. உலகில் அதிக எண்ணிக்கையான வங்கிகள் எந்த நாட்டில் உள்ளது?

சுவிஸ் - 572 வங்கிகள்

06. கணனியில் மிகவும் சக்தி வாய்ந்த கணனி எது? எந்த நாட்டில் தயாரித்து வைத்திருக்கின்றார்கள்?

சுப்பர் கணனி, ஐக்கிய அமெரிக்கா

**கெ. யஸ்மினி**
தரம் - 02

## அம்மா

அம்மா அம்மா அம்மா
ஆசையான அம்மா
இனிமை மிகுந்த உணவை
ஈடில்லாமல் சமைத்து
உள்ளம் மகிழ்வுடன்
ஊட்டிவிடும் அம்மா
எண்ணும் எழுத்தும் கற்று
ஏற்றமுற வைப்பார்
ஐயம் எல்லாம் நீக்கி
ஒன்று கூடி வாழ்ந்து
ஓதி உணர்ந்தொழுகி
ஔவை காட்டிய வழியில்
அன்புடன் வாழ வைப்பார்

**க. சஞ்ஜய்**
தரம் - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாறு

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்துக்கு அருகில் சைவத் தமிழ்ச் சூழலில் ஒரு பாடசாலை அமைய வேண்டும் என்ற அப்பிரதேசப் பெரியவர்களின் விருப்புக்கு அமைய அப்பகுதியில் வாழ்ந்த கிராமசேவகர் சு. கனகசபை அவர்களும், வ.கந்தையா அவர்களும் நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு அருகில் ஒரு பாடசாலையை நிறுவ முன்வந்தனர். திரு. சு. கனகசபை அவர்கள் தனக்குச் சொந்த மாக இருந்த பத்தரைப் பரப்புக் காணியை வழங்கினார். இருவரும் இணைந்து கொட்டகை அமைத்து, சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையின் கீழ் இப் பாடசாலையை நிறுவினர். 01-07-1955 அன்று மங்கல வாத்தியம் முழங்க தபால் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த கௌரவ சு.நடேசன் அவர்கள் பாடசாலையைத் திறந்து வைத்தார். அரசாங்க அதிபரான ம. சிறிகாந்தா அவர்கள் சுபவேளையில் நகுலேஸ்வர மகா வித்தியாலயம் என்ற நாமம் சூட்டி வித்தியாரம்பம் செய்து வைத்தார்.

திரு. வ. கந்தையா அவர்களை அதிபராகக் கொண்டு 40 மாணவர்களுடன் இப்பாடசாலை செயற்படத் தொடங்கியது. படிப்படியாக மாணவர் தொகை அதிகரித்தது. கருகம்பனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் உதவியுடன் கிராமத்தில் நிதி திரட்டப்பட்டு 100 அடி நீளமும், 40 அடி அகலமும் உடைய கட்டடம் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வழங்கிய 25ஆயிரம் ரூபாவுடன் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டது. 19-05-1956இல் இப்பாடசாலையைத் தரிசித்த வடமாநில கல்விப் பணிப்பாளர் இப் பாடசாலையைப் பதிவு செய்யச் சிபார்சு செய்தார்.1957 முதல் இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கப்பட்டது.

1960இல் க.பொ.த.சாதாரண வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டு வித்தியாபதியின் (அரசாங்க) முகாமைக்கு உட்படுத்தப்படடது.பின்னர் பாட சாலைக்குத் தென்புறமாக இருந்த 181/2 பரப்பு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்டது. 281/2 பரப்புக் காணியுடன் 01.07.1965இல் பத்தாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடியது. 29-06-1969இல் கதம்ப விழா வைத்து அதன் மூலம் பெறப்பட்ட நிதியில் கிணறு வெட்டப்பட்டு தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

1977இல் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வழங்கிய 30ஆயிரம் ரூபா நிதியில் 60X20 அடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. 1978இல் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ.அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய 20ஆயிரம் ரூபா நிதியில் 40 X 20 கட்டடம் கட்டப்பட்டது. 1980இன் முற்பகுதியில் 524 மாணவரும், 12 முழுநேர ஆசிரியரும் ஒரு பகுதிநேர ஆசிரியரும் கடமையாற்றினர். பாடசாலை இக்காலப்பகுதியில் பல வெற்றிச் சாதனைகளைப் பதிவு செய்து வாகை சூடியது. 1980இல் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.வ.கந்தையா அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திருமதி த.இராமசாமி அதிபரானார். இவரது காலத்தில் பொறியியலாளர் இரத்தினம் அவர்களது உதவியால் இருமாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

1990இல் இடம்பெற்ற போர்ச்சூழலைத் தொடர்ந்து பாடசாலை அசையும் சொத்துக்களுடன் இடம்பெயரத் தொடங்கி, பின்வரும் இடங்களில் இப்பாடசாலை இயங்கியது.

15-06-1990இல் இளவாலை அன்னை வேளாங்கன்னி ஆலயம்
05-12-1990இல் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்
15-07-1991இல் சிறுவிளான் கனகசபை வித்தியாசாலை
24-06-1992இல் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
07-09-1992இல் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்
28-03-1994இல் சீரணி, சண்டிலிப்பாயில் தனியார் வீடு
01-02-1996இல் வரணி மகா வித்தியாலயம்
06-05-1996இல் சண்டிலிப்பாயில் தனியார் காணி
10-01-2005இல் சண்டிலிப்பாய் மத்தியில் தனியார் வீடு

பாடசாலை உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் இயங்கிய காலத்தில் அதிபராக இருந்த காலத்தில் திருமதி த. இராமசாமி அவர்கள் ஓய்வு பெற திருமதி ஜெ. கலாதரன் அவர்கள் பொறுப்போற்று நடாத்திவரும் வேளையில் திரு. எஸ். நடராஜமணி அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். பொறுப்பேற்று ஓரிரு மாதங்களில் இவர் இயற்கை எய்தினார். அதனால் திரு. வை. கணேசமூர்த்தி அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். அவரது காலத்தில் பாடசாலை சண்டிலிப்பாயில் தனியார் வீட்டில் இயங்கிய சமயம் 1995 பிற்பகுதியில் பாரிய இடப்பெயர்வை சந்தித்து மீண்டது. 1996இல் திரு. வை.கணேசமூர்த்தி அவர்கள் இளைப்பாற திரு. சு.சிவபாதரத்தினம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றார்.

இவரது காலத்தில் பாடசாலை க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், சாரணியம் போன்றவற்றிலும் தனது சாதனைகளை படைத்துவந்து இக்காலத்தில் 2004ம் ஆண்டு பாடசாலை இயங்கிய தனியார் வீட்டினை கொள்வனவு செய்தவர்கள் வீட்டினை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கூறினர். பாடசாலைக் கட்டடம் அமைப்பதற்கு தகுந்த இடவசதியின்றி மிகுந்த நெருக்கடிக்கு ஆளான வேளையில் ஆசிரியர்களாக வீதியில் இறங்கி இடம் தேடும் நிலை ஏற்பட்டது. பாடசாலையை மூடுங்கள் என்போரும், வேறொரு பாடசாலையுடன் இணையுங்கள் என்போருமாக பல்வேறுபட்ட கருத்துக்கள் மத்தியில் அதிபர் திரு.சு.சிவபாதரத்தினம் அவர்களும் அப்போதைய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சிலர், நலன்விரும்பிகள் ஆகியோரின் அயராத உழைப்பினால் பாடசாலை தனது தனித்துவத்தையும் பெயரையும் இழக்காமல் தனியார் ஒருவரின் காணியில் கால்பதித்தது. அப்போது அக் காணியை வழங்கி பாடசாலையின் தனித்துவத்தை பாதுகாத்த திரு. நாகராஜா அவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராது உழைத்த திரு.சு.சிவபாதரத்தினம் அவர்களும் என்றும் எமது பாடசாலை சமூகத்தால் போற்றப்பட வேண்டியவர்களேயாவர்.

இவ்வேளை 2005 இல் பெற்றோர், பழையமாணவர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்புடன் பொன்விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு பொன்விழா மலரும் வெளியிடப்பட்டது.

அவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து பாடசாலையை திரு.த.மோகன்ராஜ் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் மலசலகூடத் தொகுதி அமைக்கப்பட்டது.

01-02-2010இல் இலங்கை அதிபர் சேவை நியமனம் பெற்று திரு. சு. ஸ்ரீகுமரன் பாடசாலையைப் பொறுப்பேற்றார். 515ஆவது படைப்பிரிவுடன் தொடர்பு கொண்டு 24.05.2010இல் இராணுவ வழித்துணையுடன் கீரிமலையிலுள்ள பாடசாலை பார்வையிடப்பட்டது. காடாகப் பெருமரங்கள் வளர்ந்திருந்த நிலையிலும், கட்டடங்கள் அழிவடைந்த நிலையிலும் இருந்த பாடசாலை தொடர்பான விடயங்கள் திணைக்களத்துக்கு படங்கள், அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட்டது. மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டதும் தெல்லிப்பழை பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கட்டடங்கள் அமைப்பதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இராணுவ அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மீளெழுச்சித் திட்டத்தின் மூலம் பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டு, நகுலேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பின் கீழ் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டன. மலசலகூடமும் திருத்தப்பட்டது.

29-06-2011 அன்று வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 90 அடி நீளமும்,25 அடி அகலமும் கொண்ட ஆய்வு கூடத்துடன் கூடிய மாடிக் கட்டடம், தண்ணீர்த் தாங்கி, ஆண்கள் மலசலகூடத் தொகுதி ஆகியன அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அதிபரின் தலைமையில் இடம்பெற்றது. நிதி ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஆரியரத்ன ஹேவகே மற்றும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. இ.இளங்கோவன் ஆகியோர் அடிக்கற்களை நாட்டி வைத்தனர்.

சேவாலங்கா நிறுவனம் கிணற்றைத் திருத்தி அமைத்ததுடன் மைதானத்தையும் புனரமைத்துக் கொடுத்தது. சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் (Save the children) 40 அடி நீளமான வகுப்பறைத் தொகுதியைப் புனரமைத்துத் கொடுத்ததுடன் தற்காலிக கொட்டகைகளைச் சண்டிலிப்பாயில் இருந்து அகற்றி, கீரிமலையில் மீள நிறுவ நிதியுதவி அளித்தது.அத்துடன் பெண்களுக்கான மலசலகூடத் தொகுதியினை அமைப்பதற்கும் உதவியது. பாடசாலையை இயங்க வைப்பதற்கான அடிப்படையை இவ்வமைப்பே ஏற்படுத்தித் தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

02-01-2012 அன்று கீரிமலையில் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. ஆரம்ப வைபவத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. ராஜேந்திரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன், தெல்லிப்பழை பிரதேசச் செயலர் திரு.சு.முரளிதரன், சிறுவர் பாதுகாப்பு (Save the children) நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 83 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சப்பாத்துக்களை வழங்கியது. அத்துடன் பச்சைப் பலகை, விளையாட்டு உபகரணங்களும் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

அதிபர் திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களால் 90 அடி நீளமான மாடிக் கட்டடக் கீழ்த் தளம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. 14-02-2012 அன்று இதற்கான அடிக்கல் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் கௌரவ முருகேசு சந்திரகுமார் அவர்களால் நாட்டப்பட்டு, கணனிக்கூடம், நூலகம் உள்ளடங்கியதாக கட்டட வேலைகள் நிறைவடைந்துள்ளன.

உலக உணவுத் திட்ட நிதியுதவியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் சமையலறையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை அபிவிருத்தி நிதிக் கொடையின் கீழ் பாடசாலைத் தோட்டவேலி அமைக்கப்பட்டதோடு, மின்சார, நீர்விநியோக வசதிகளும் மேம்படுத்தப் பட்டுள்ளன.

பாடசாலைக்கென ஒரு பரப்பு இரண்டு குழி அளவுடைய காணியை திரு. வ. ஞானசம்பந்தன் அவர்கள் அதிபரின் கோரிக்கைக்கமைய இலவசமாக வழங்கியுள்ளார்.

இதுவரை அதிபராகக் கடமையாற்றிய திரு. சு. ஸ்ரீகுமரன் அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை நியமனம் கிடைத்து உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்து 2013 ஜனவரி முதல் திருமதி யாமினி சதீஸ்குமார் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார். இவரது காலத்தில் என்.டி.பி. பங்குத்தரகர் நிறுவனத்தால் மூன்று கணனிகள் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலையின் பழைய மாணவரான திரு. உ. பரராஜசிங்கம் அவர்கள் பழைய மாணவர்கள் சிலரின் உதவியுடன் பாடசாலைக் கான 350 மீற்றர் நீளமான சுற்றுப்புற வேலியை அமைத்துத் தந்ததுடன் பாடசாலை வாயிலை நிர்மாணித்து, இரும்புக் கதவினையும் நிறுவியுள்ளார்.

தற்போது 199 மாணவர்களுடனும், 11 நிரந்தர மற்றும் 3 பகுதிநாள் ஆசிரியர்களுடனும் செயற்படும் பாடசாலை இம்முறை க.பொ.த. சாதாரண தரத்தில் நீண்ட காலத்தின் பின் சிறப்பான பெறுபேற்றைப் பெற்றுள்ளது. அத்துடன் தமிழ்த்தின, சிறுவர் தினப் போட்டிகளில் பல வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது.

**திருமதி இ. பற்குணராஜா**
உப அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cleaner and Greener Tomorrow

World Environment day 2013 bill be celebrated on June 05 under the theme 'THINK EAT SAVE' the event is held annually since to great global awareness of the need to take healthy and sustainable steps to product environment as is the case with many international days. World environment day too was declared by united nations and is run by the united nations environment programme (UNEP)

According to the UNEP this year 'THINK EAT SAVE' encourages people to become more aware of the environmental impact of the food choice they make and empowers then to make import decisions world environment day aim to reduce food waste. The new food impaired global campaign on the fact that over on billion tons of food are lost or wasted each year. According to UNEP the campaign supported by food and agriculture organization (FAO) and others, aim to reduce food loss along the entire chain aim of food production and consumption and specifically targets food wasted by consumers, retailers and hospitality industry.

In a world of 7 billion people set to grow to nine billion by 2050, wasting food makes no sense economically environmentally and ethically said UN under secretary General.

Due to various human activities a great deal of environmental degradation is taking place all over the world. Natural habitats of animals are destroyed. Trees are being cut down in order to construct buildings annually, areas of dense forest are as a cleared in the name of development as a result biodiversity of there florets is badly affected global warming and climate change are direct adverse consequences of environmental degradation.

As already mentioned degradation international of calibrating world environment day is to make individuals at every level



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

understand the value of preserving the environments. Development practices have to be done with

Anyone can start environmentally friendly living by doing simple things at home such as, Switching off unnecessary lights, and appliances, repair broken taps save water by working off taps when water is used, using reusable bags. Other methods that could be used include utilizing a compost bin to recycle kitchen waste as recycling will reuse the amount of garbage you dispose as municipal waste. Along 85% of what we throw out from our house holds are easily bio degraclable waste using will provide us fertilizer for or our gardens at no cost. After all it is better to take small steps on behalf of the planet to do nothing at all. But the hitch is will this be enough? Will these steps or even bigger ones taken on a global scale help prevent the drastic effects of population growth greenhouse gas emission, logging, over fishing etc.

Are we not too late? Can we reverse the process we have instigated in bringing alont are ecological catastrophe of unparalleled scope and siginificamce.

There seems no way around it. Planet Earth is on a track headed straight for destination. A world wide collapse is coming sometimes this century.

On June 5 there will be awareness programmes in our country too. Hope all of you will participate in these programmes.

In Order to have a cleaner and greener tomorrow all of us have to be more environmental friendly.


**T. Guhanesan**

Part time English Teacher




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சி சில காட்சிகள்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நகுலன் சஞ்சிகை வெளியீட்டிற்கும் அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| 01. | திரு. உ. பரராஜசேகரம் (நகுலன் வெளியீடு) | 25,000/- |
| 02 | திரு. க. தயாபரநாதன் | 20,000/- |
| 03. | திரு. உ. ரவீந்திரன் | 20,000/- |
| 04. | திரு. பொ. இராதகிருஷ்ணன் | 10,000/- |
| 05. | திரு. சி. சிவகுமார் | 10,000/- |
| 06. | திருமதி ஜெ. கலாதரன் | 5,000/- |
| 07. | செல்வி ஜெ. தம்பாபிள்ளை | 2,000/- |
| 08. | தண்டிகை குடும்பம் | 2,000/- |
| 09. | திரு. தர்மரட்ணம் | 2,000/- |
| 10. | திரு. மகாலிங்கம் குடும்பம் | 2,000/- |
| 11. | திருமதி ச. சோமசுந்தரம் | 2,000/- |
| 12. | திருமதி சி. சிவகுமார் | 2,000/- |
| 13. | திரு. இ. திருச்செல்வம் | 2,000/- |
| 14. | திருமதி க. ஸ்கந்தரூபன் | 2,000/- |
| 15. | திரு. திருமதி சிவகுமார் | 2,000/- |
| 16. | திருமதி இ. பற்குணராஜா | 1,000/- |
| 17. | திரு. க. அருள்லிங்கம் | 1,000/- |
| 18. | திருமதி செல்வலட்சுமி | 1,000/- |
| 19. | செல்வி சி. சிவமலர் | 1,000/- |
| 20. | திரு. ம. பா. மகாலிங்கசிவம் | 1,000/- |
| 20. | திரு. மா. கேதீஸ்வரன் | சான்றிதழ்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org